உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] துந்துபி-௵ மாசி-௴ [பகுதி ச.
Vol. XXI. February-March-1923. No. 4.

வஞ்சிமாநகர்.

ஏழெட்டு மாதங்களுக்குமுன் இவண் போந்திருந்த எமது நண்பரும் இத்தமிழுலகுக்கே ஓர்நன்கலனையும் ஆண்டிப்பட்டிஜமீன்தாருமான மகா-௱-௱-ஸ்ரீ பெத்தாச்சிசெட்டியாரவர்கள் தனது கரூரினின்றும் "வஞ்சிமாநகர்" "சேரன்செங்குட்டுவன்" என்னும் இரண்டு புத்தகங்களை வரவழைத்துக்கொடுத்து எமது அபிப்பிராயத்தையும் உசாவினதினிமித்தம் அடியிற்கண்டவாறு யெமக்கெட்டியதைக் கூறலாயினம் மகா-௱-௱-ஸ்ரீ செட்டியாரவர்கள் இவண் வதிந்தொழுகிய காலத்தே இவைகளை நேரிற் சொல்லலிலும் அளவளாவலிலுமுண்டாயிருந்த பெரும்பாக்கியத்தை, இடைவிடாதுள்ள வக்கீல்வேலையினாலும் இவ்வாராய்ச்சிக்கேற்றபுத்தகங்களை வரவழைத்துப்பார்க்க போதியவசதிகளின்மையானும் இழந்துள்ள மனக்குறையை மாற்றுவான் செந்தமிழ்ப் பத்திரிகைவாயிலாத் தமக்கும் இத்தமிழுலகுக்குமெட்டும் வண்ணம் பிரசுரித்தலே நன்றென்று, அப்பெருந்தகையுத்தரவளித்ததற்கிணங்கி இதை வெளியிடுகின்றனம்.

வஞ்சிமாநகரென்பதியாது? அது எவணிருந்தது? என்னுமாராய்ச்சிபுதியதன்று. அதைப்பற்றி அநேக சிறந்தபண்டிதர்களவ்வ

வர்க்குத்தோற்றியதைக் குறித்துள்ளார்கள். அவர்களில் பிரம்மஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்காரவரவர்களும், மு. இராகவையங்காரவர்களும் முறையே வெளிப்படுத்தியுள்ள வஞ்சிமாநகரென்னும் புத்தகத்திலும், சேரன் செங்குட்டுவனென்னும்புத்தகத்திலும் மேற்குறித்த கடாவுகளுக்கு விடைகளும் தங்களபிப்பிராயத்துக்கேற்பச்சான்றுகளும் போதியவளவு கொடுத்துள்ளார்கள். இவர்களையொட்டி "ஹிண்டு" என்னுமாங்கிலப்பத்திரிகையின் சென்ற ஆகஸ்டு மாதம் 30-ம் தேதி சஞ்சிகையில் பிரம்மஸ்ரீ உ. வே. ஆர். அரங்காச்சாரியாரவர்கள் M.A. L.T. தம்மபிப்பிராயத்தையும்வரைந்துள்ளார்கள். இவ்வித்வான்களின் துணிபு வஞ்சிமாநகரென்பது திருவானிலைக்களூர்தானென்பது. மற்றொருசாரார் பிரம்மஸ்ரீ கே. வி. சுப்பிரமண்ணியய்யரவர்களும் ஏனையசிலரும் அவர்களையொட்டிமேற்கண்ட "ஹிண்டு" பத்திரிகையின் நிகழும் நவம்பர் மாதம் 11-ம் தேதி சஞ்சிகையில் ராவ் பகதூர் பி. ஐ. சின்னசாமிபிள்ளையவர்களும் வஞ்சிமாநகரென்பது கொடுங்கோளூர் தானென்று நிலைநாட்டியுள்ளார்கள். ஆயினும் இவர்கள் தத்தங்கருத்திற் கிணங்கப்போதிய முகாந்திரங்களை யெடுத்துக்காட்டாமலேவிட்டனர். "வஞ்சிமாநகர்" "சேரன் செங்குட்டுவன்" என்னும் புத்தகங்களினாசிரியர்களோ! தத்தங் கருத்திற்கேற்ற வேதுக்களுடனும் கொடுங்கோளூர் வஞ்சிமாநகரென்பது அசம்பாவிதமென்றும் போதிய முகாந்திரங்களும் செவ்வனே காட்டியுள்ளார்கள். மற்றொருசாரார் காலஞ்சென்ற மகா-௱-௱-ஸ்ரீ கனகசபை பிள்ளையவர்களும் அவரையுள்ளிட்டாரும் திருவானிலைக்களூருமன்று கொடுங்கோளூருமன்று தற்காலம் கொச்சிநகரத்திற்கு 28 மயில் தூரத்துள்ளதும் நகரற்றுப்பாழாய்க்கிடப்பதுமாய் திருக்களூரென்னும் தலந்தான் வஞ்சிமாநகரென்றாகித்துள்ளார்கள். இவரியற்றியுள்ள "The Tamils 1800 years ago" வென்னும் நூல் இன்னும் எனக்குக் கிடைத்திலதாதலால் அவரபிப்பிராயத்தை நன்காராயவழியின்மையைக் குறித்து விசனிக்கிறேன்.

அது நிற்க. மேற்கண்டவித்வசிரோமணிகள்பலரும் ஆராயாநின்றது வஞ்சிமாநகர் யெவணிருந்தது என்பது முக்கியமான விடயமாயிராமல் சேரன் செங்குட்டுவனுக்குத் தலைமைநகராயும் அவனிருந்து அரசாட்சி புரிந்து வந்தகாலத்து வஞ்சிமாநகரென்று சிலப்பதிகாரத்தும் மணி

மேகலையினும்சிறப்பித்துக்கூறியுள்ளதுமானநகர்யாதென்பது தான்விடய மெனக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஆதலின் இவனும் அவ்விடயத்தை யேதலையாக்கொண்டாராய்வாம்.

பிரம்மஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்காரவர்களும் திருவானிலைக் கரூர்தான் வஞ்சிமாநகரென்னும் கொள்கையை நிலைநாட்டுவானெடுத்துக் காட்டியுள்ள வாதாரங்களில் முக்கியமானவையாமாறு:—

I. இக் கரூர்த்தலபுராணத்தில் கரூருக்கு வஞ்சுளாரணியமென்னும் பெயரிருந்ததென்றும், வஞ்சுளமென்னும் மரங்களடர்ந்திருந்தமையின் அப் பெயர்பெற்றிருந்ததென்றும் கூறியுள்ளது. மேலும் வஞ்சுளாவென்று ஆகாராந்தப்பதமா யெடுத்துக்கொள்ளின் மிகுதியாகப் பால்கறக்கும் பசுக்களையுடையகாடெனினு மமையுமென்னும் பொருளுக் கிணங்க அவ்வூருக்கே திருவானிலையென்ற பெயரும் அங்ஙனே கோயில் கொண்ட சிவபெருமானுக்குப் பசுபதீச்சுரரென்ற பெயரும் அதையடுத்தோடும் ஆற்றுக்கு ஆன்பொருநையென்னும் பெயரும் தக்க சான்றாகு மென்றும் கூறியுள்ளார்கள்.

II. (a) "நெடுந்தேர்க்கோதை
திருமாவியனகர்க்கருவூர்முன்றுறைத்
தெண்ணீருயர்கரைகுவைஇய
தண்ணான்பொருநைமணலினும்பலவே"

(அகநானூறு–93).

(b) "தண்பொருநைப்புனற்பாயும்
விண்பொருபுகழ்விறல்வஞ்சி"

(புறம்–11)

(c) "தண்பொருநைசூழ்தரும்வஞ்சியர்கோமான்"

(சிலப்–29).

(d) "வஞ்சிப்புறமதிலலைக்குங்
கல்லென்பொருநைமணலினும்"

(புறம்–347).

(e) "இவன்யாரென்குவையாயினிவனே
* * * *
விழுநீர்வேலிநாடுகிழவோனே"

(புறம்–13).

இவையு மிவைபோல்வனசிலவும் இக் கருவூரையே குறிக்கின்றன வென்பது,

III. (a) இக்கருவூர்த் துர்க்கை வஞ்சியம்மனென்று பெயர்பூண் டிருத்தல்.

(b) ஆம்பிராவதிக்கு வடக்கே கோயில்கொண்ட சிவபெருமானுக்கு "வஞ்சுளேச்சுரலிங்கம்" எனப்பெயர்.

IV. "செங்குணக்கொழுகுங்கலுழிமலிர்நிறைக்
காவிரியன்றியும்பூவிரிபுனலொரு
மூன்றுடன்கூடியகூடலனையை"

(பதிற்–50).

இதில், காவிரியும், ஆம்பிராவதியும், குடவனாறும் கூடுகின்றன வென்னும் பழையவுரையைத் தழுவியும், இக்கூடற்கப்பால்தான் காவிரி நேர்கிழக்கே யோடுகின்றதெனப் பொருள்கொண்டும் ஆம்பிராவதிக் கரையில்தான் வஞ்சிமாநகருள்ளதென்று நன்குபெறப்பட்டதென்பர்.

V. "ஆடகமாடத்தரிதுயிலமர்ந்தோன்"

சிலப்–26).

என்பது கருவூரிலாசவனத்தில் கோயில்கொண்ட அரங்கநாதர் சந்நிதியைக் குறிப்பித்ததென்பர்.

VI. பழைய ரோமசக்கரவர்த்திகள், அகஸ்டஸ், டைபீரியஸ், கிளாடிபஸ் இவர்களுடைய நாணயங்கள் இக்கருவூர்ப்பக்கத்தே கண்டெடுக்கப்பட்டிருப்பதென்பது.

மேற்கண்ட வாருதாரங்களே யெமக்கெட்டியவரை திருவானிலைக் கரூர்தான் வஞ்சியெனக்காட்டக்கூடிய பல வாதாரங்களிலும் மேம்பட்டவையெனத் தெரிகின்றன. அவைகளையாராய்வோம்.

I. வஞ்சுளாரணியமென்பது மரவிசேடத்தாலுண்டாகிய பெயர் அல்லது பசுக்கள் மலிந்திருத்தலினுலாகிய பெயர். இக்காரணத்தானே கருவூருக்கு வஞ்சிமாநகரென்னும் பெயர் வாய்த்ததெனக் கூறுவர். இப்பெயர் வஞ்சிக்கொடியினுலுண்டாயதன்றென்றும் கூறுவர். ஆயின்,

"பொற்கொடிப்பெயர்படூஉம்பொன்னகர்"

(மணிமேகலை 26–92).

"பூங்கொடிப்பெயர்படூஉம்திருந்தியநன்னகர்"

(மணிமேகலை–28–101–102).

எனச் சீத்தலைச்சாத்தனுர் விசேடித்துரைத்திருத்தலின் வஞ்சி யென்னும் பெயர் வஞ்சியென்னும் கொடியினுலுண்டாயதென்று ஏனைய சிலர் வரைந்திருப்பதை மறுத்து அவ்விரண்டு வாசகங்களுக்கும் பொருள் அதன்று கொடியின் பெயரைப்பூண்ட வூரெனக்கொளல்வேண்டுமென ஸ்ரீமாந்- உ. வே. ரா. இராகவையங்கார் பணித்துளார். அதெமக்கும் சம்மதமேயாயினும்,

"உற்றவளாங்கோருயர்தவன்வடிவாய்ப்
பொற்கொடிவஞ்சியிற்பொருந்தியவண்ணமும்"

(மணிமேகலை. பதி–85–86.)

என வந்திருத்தலால் வஞ்சியென்னுமூர்க்குப்பெயர் கொடியினுனுண்டாகியதெனப் பொருள்கூறினுமிழுக்காகாது. மேலுமப்பிந்தியவடிக்கு "பொற்கொடிமூதூர்" என்று பாடபேதமிருத்தலி னதற்குக் கொ[illegible] லுண்டாய வஞ்சியெனப் பொருள்படுமேயல்லாது கொடியி[illegible] பூண்ட வஞ்சியெனப் பொருளாகாது.

"பூங்கொடிவஞ்சிமாநகர்புகுவை"

(மணிமேகலை 21–91

இதுவுமப்பொருள்படுமாறுணர்க.

தவிர, அநேகமுறை கொடியால்விசேடித்து வஞ்சியைக்கூறியுள்ள சாத்தனுர் திருவானிலைக் கருரைக் குறித்துக் கூறினராயின், மரவிசேடத்தாலாய வூரென்றுவது, பசுவிசேடத்தாலாய வூரென்றுவது, கருப்பத்தாலாய வஞ்சியென்றுவது கூறியிருப்பாரன்றே? அங்ஙனம் அவர் கூறுததும் இளங்கோவடிகளங்ஙனம் கூறுதொழிந்ததும் வஞ்சிமாநகர் திருவானிலைக் கருரான்றென்று சொல்லுவதற்குத்தக்க சான்றுகுமென்று பலர் துணிவது சிறிது வலியுடைத்தாதல் காண்க.

II. இவ்விலக்கத்தின் கீழ்க்காட்டியுள்ள ஐந்து தாரணங்களும் திருவானிலைக் கருவூரையே குறித்துள்ளனவே யொழிய வேறெவ்வூரையும் குறித்திலதென்பது திண்ணம். ஆகையினுல் வஞ்சியெனப்படுவது கருவூரேயென நிலைநாட்டுவதற் கிவை தக்கசான்றுதல் பெறப்படும்.

III. இவ்விலக்கத்தின்கீழ்க்கண்ட விரண்டுதாரணங்களும் வஞ்சுளாடவியெனும் பெயரைக்கொண்டே வஞ்சியம்மனுக்கும், வஞ்சுளேச்சுரலிங்கத்திற்கும் பெயர்பூட்டப்பட்டனவாகக் காணப்படுமாகையின் அவற்றினின்றும் வஞ்சிமாநகர் திருவானிலைக்கருவூர்தானெனத் துணிவதிழுக்காகும்.

IV. "செங்குணக்கொழுகுங் .... கூடலனையை யெனும் பதிற்றுப்பத்தடிகளுக்கு காவிரியாறும், ஆம்பிராவதியும், குடவனாறும் கூடும் கூடலென்று உரைகூறியுள்ளது பொருந்தாததாகும். இச்செய்யுளில் காவிரியும் ஆன்பொருநையும் கூடுவதென்பது எத்தாற் பெறப்பட்டதென விளக்கிலர். இச்செய்புள் சேரனைக்குறிக்குமாற்றுல் சேரநாட்டின்கண் மிகவும் பிரசித்திபெற்ற கூடலாகிய பவானிக்கூடலென்னும் தலமிருக்க அக்கூடலில் காவிரியும் பவானியும் (அந்தர்வாகினியாக) அமிர்தநதியும் கூடுவதென்னுமைதிகமிருக்கக் கருவூருக்கு 6 மைல் ... குள்ள ஆன்பொருனைக் கூடலையே பதிற்றுப்பத்தாசிரியர் கூறின ... ப்படுவ தென்னையெனத் தெரிகிலம். அதல்லாமலும் இக் ... தும் திருவானிலைக்கருவூருக்கும் சம்பந்தம் கற்பித்துள்ள தெங் ... றும் விளங்கவில்லை. இக்கூடல் கடலாவதெங்ஙனமென்றும் ... லை. "மாதவனுர்வடகொங்கில்வானியாற்றின்" (பரமதபங் ... என்ற தேசிகர்வாக்கே வானியென்பது ஆன்பொருநையன்

றென்று வற்புறுத்தும். பவானியாற்றுக்கு "வானி" யல்லது "பானி" "ஆனி"யென்னும் பெயர்கள் தொன்றுதொட்டு இற்றைக்கும் வழங்கி வருவதையும், வடகொங்கில் பவானியாறுதான் சேரர்க்குள்ள பேரியா றென்பதையும் நன்குணர்க. "செங்குணக்கொழுகும்" என்பதற்குப் பொருள் ஸ்ரீமாந். ரா. இராகவையங்காரவர்கள் காவிரி ஆன்பொருநை யுடன் கூடியதினின்றுமே நேர்கிழக்காகவோடுகின்றதெனக் கூறியுள் ளார். அது அங்ஙனம் புலப்படவில்லை. இச்செய்யுள் அக்கூடலையே குறிக்கவில்லையென்ப தொருபாற்கிடக்க, காவிரி தெற்கே பாண்டிநாட்டுக் காகக் கொணர்ந்ததை சோழனுடைய வேண்டுகோளினுலு மிந்திர னுடைய வேண்டுகோளினுலும் மூத்தபிள்ளையார் காகவுருவங்கொண்டு அகத்தியர்கொணர்ந்த கரகத்தைக் கவிழ்த்துக்கிழக்கேயோட்டினுரென்னு மைதிகத்துக்கிணங்கக் கருவூருக்கும் 20 மயிலுக்குமேற்பட்டு வடமேற் கேயுள்ள திருப்பாண்டிக்கொடுமுடிக் கெதிர்க்கரையில் அகத்தியர்பாறை யென்னும் ஒருபாறையும் அதனின்றே காவிரியாறு கிழக்கேயோடுவதை யும் இற்றைக்குங் காணலாம். செங்குணக்கென்பதற்குக் கீழ்கடலையே குறித்துச்செல்லும் காவிரியெனலும் பொருந்துமாதலானு மக்கூட லென்பது பவானிக்கூடலைக் குறிக்கினும் அதுவும் சேரநாட்டதே யாத லானும் ஸ்ரீமாந். ஐயங்காரவர்கள்கொண்டகொள்கை சரியாமாறுகாண்க. ஆயினும் திருவானிலைக் கருவூருக்கும் அக் கூடலுக்கும் யாதாமொரு பொருத்தமுமின்றென்பதும் வெள்ளிடை விலங்கலென விளங்கும்.

V. "ஆடகமாடத்தரிதுயிலமர்ந்தோன்
...."

இவ்வாசகங்களினின்றும் போந்தது ஆடகமாடம் கருவூரிலிரா நின்ற அரசவனத்தரங்கநாதர் கோவிலைக்குறித்ததென்றும் திருவநந்த புரத்தைக்குறித்தது தவறென்றும் ஆடகமாடம் வஞ்சிமாநகரின் கண்ணேயுண்டாயிருந்திருக்கவேண்டுமென்றும் அது அரசனரண்மனைய கத்ததேயென்றும் ஸ்ரீமான்கள் உ. வே. அய்யங்காரவர்களிருவரும் துணிந்துள்ளார்கள். இக்கொள்கைக்கு மாறுய குற்றம் ஒன்றுதெளி வுறக்கிடக்கின்றதையாராய்வேம். ஆடகமாடமென்பது அரங்கநாதர் கோயிலாயினும் சேரன் செங்குட்டுவனதரண்மனையகத்ததாயினும் மிகவுமயலதாயிருந்திருக்கவேண்டும், செங்குட்டுவன் தன்வாளுங்

குடையும் பரஸ்தானப்படுத்தியதும் அவன் மறுநாட்காலையில் புறப் பாடுந்தெரிந்தே (அவனுணையினுல்) சேடங்கொண்டு சிலர் வந்தேத்தினு ரென அவ்வித்துவான்களிருவரும்ஊகிக்கின்றனர். அங்ஙனம் "ஆடக மாடம்" அயலதாயிருக்குமாயின் சிவபிரானையிறைஞ்சியுமந்தணரக்கினி கோத்திரத்தை நமஸ்கரித்தும் புறப்படுகிற செங்குட்டுவன் ஆடகமாடத் தேபோய் திருமாலைவணங்கி பிரசாதம் பெறுமலியானை யேறினுனென்பது அசம்பாவிதமாகும். அவன் சிவபிரானையிறைஞ்சி அக்கினி கோத்திரத் தைநமஸ்கரித்து சிறிதுந்தாழ்க்காதுயானை யேறினதும் ஆண்டு சேடங் கொண்டு சிலரேத்தியதும் சேரன் அச்சேடத்தை யெதிர்பார்த்தவனன் றென்பதையும் ஆடகமாடம் அயலதாகாமையும் சேணதென்றே ஏற்படு வதையும் காணலாம். ஆகையின்வஞ்சிமாநகர் கொடுங்கோளூராயினும் வேறெவ்வூராயினுமிருக்கலாமேயொழிய திருவானிலைக்களூராயிராமை நன்குபுலப்படும். "ஆடகமாடம்" என்பது அரும்பதவுரையாசிரியர் சங்கித்தவாறு இரவிபுரமாயின் இரவிபுரமென்று பெயர் வழங்கிவரு மூரின்கண் அரங்கநாதர் மூர்த்தங் கொண்ட திருமால் கோயிலுமுடைத் தாயிருக்கவேண்டுவது அவசியமாகையால் வழங்கிவாராதபெயராகிய பாஸ்கரபுரமெனக்கொண்டு அதன்மொழிபெயர்ப்பாக இரவிபுரமெனக் கூறினுரென்பது இயற்கையாயமையும்பொரு ளன்றுமாறும் நன்கு தெளியப்படும். சேடக்குடும்பியும் வஞ்சிமூதூரின்கண்வதியும் வைணவ பத்திபொருந்தியவனென்பது எமக்குஞ்சம்மதமே. அதனுனே ஆடக மாடம் வஞ்சிமூதூரின் கண்ணிருந்தேயாக வேண்டுமென்பது பெற வேண்டுவதில்லை. இற்றைக்கும் மலையாளத்தின்கணுள்ள கோயில்களில் சிவபெருமான் கோயிலினும் ஸ்ரீமகாவிஷ்ணுகோயிலினும் அருச்சகர் சாந்திக்காரரெனப்பெயர் பெறுவர். அவர் மங்களாபுரத்துவேதிய ராயினும் மலையாளத்திலும் குடும்பத்தோடுவதிந்து எக்கோயிலிலூழிய முண்டாயிருக்குமோ அங்கே குடும்பத்தைத்தம்மூரிலேயே வைத்து விட்டுத் தனியேசென்று ஆறுமாதங்களுக்கூழியஞ்செய்து மற்றவாறு மாதங்களிலும் குடும்பத்துடனிருப்பது இப்போதைக்குந் தொன்று தொட்டு நடந்துவரும் வழக்கமாயதால் சேடக்குடும்பிதிருவடிபிடிக்குந் திருமாலின் கோயில் வஞ்சிமாநகரிலில்லாமல் வேறு எங்ஙனமாயினு மிருத்தல் இழுக்காது. அதன்றியும் சேடங்கொண்டுவந்தேத்திய சில ருள் இச்சேடக்குடும்பியுமொருவனுயிருக்கவேண்டுமென்பதூஉம் புலப்

படுதல்காண்க. இரவிபுரமென்பது கன்னியாகுமரிக்கு வடமேற்கில் 10 மைமயில் தூரத்துள்ளதென்றும் அதில் ஆடகமாடமெனப் பெயர்பூண்ட அரங்கநாதர் கோயிலொன்றிருக்கிறதென்றும் ஸ்ரீமான் கதிரைவேற் பிள்ளையவர்களின் அகராதியைக்கொண்டுமறியலாம்.

VI. பழைய ரோமசக்கரவர்த்திகளின் நாணயங்கள் திருவானிலைக் கரூரின் மாத்திரமன்று அநேகவூர்களினின்றும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. அதிகமாய் மேற்கடற் றுறைமுகப்பட்டினங்களினின்றுமே யெடுக்கப்பட்டுள்ளனவாதலின் இது திருவானிலைக்கருவூர்தான் சேரன் செங்குட்டுவனுக்குத் தலைநகராய வஞ்சிமாநகரமென்று துணிய வேது வாகமாட்டாது. ஸ்ரீமான்கள் உ. வே. ரா இராகவையங்காரவர்களும் மு. இராகவையங்காரவர்களு மெடுத்துக்காட்டியுள்ளவேதுக்களில் மேற்குறித்தவாறும் முக்கியமானவையாக வெமக்குத்தோற்றியதிறுலவைகளை யாராய்ந்தனம். இப்பொழுது கொடுங்கோளூர்தான் வஞ்சிமூதூரென்னும் கொள்கைக்குள்ள சான்றுகளைச் சற்றுராய்வாம்.

கொடுங்கோளூர்தான் வஞ்சிமாநகரென்று ஐயந்திரிபற முதன் முதற் கூறியுள்ளவர் சேக்கிழாரே. அவருக்குமுன் கொடுங்கோளூரென்பது தமிழிலக்கியங்களில் வந்திருப்பதாகத்தெரியவில்லை. சங்கநூல் களிலாவது சங்கப்புலவர்கள் பாடிய தனிச்செய்யுட்களிலாவது கொடுங் கோளூரென்றபெயராவது திருவஞ்சைக்களமென்னும்பெயராவது கிடை யாது. சேரரது தலைநகர்களாக வெடுத்தாண்டுள்ள பெயர்கள் தான் வஞ்சி, கருவூரென்பனவேயாம். திருவானிலைக்கரூர்தான் கருவூரென்றும் வஞ்சியென்றும் "நெடுந்தேர்க்கோதை" முதலாய ஐந்துதாரணங்களா லும் பெறக்கிடக்கின்றது. ஆயினும் செங்குட்டுவன் காலத்தே யாத்த சிலப்பதிகாரத்தும், மணிமேகலையினும் திருவானிலைக் கரூரைச் சிறிதும் சுட்டாமலே வஞ்சிமாநகரைக் குறித்துப் பலவிடங்களிலும் கூறிப்போந்திருத்தலின் இக்கரூர் வஞ்சியன்றென்னு மையநிகழ்தற்குக் காரணமாயிற்று. இதுவும் கி. பி. 11-ம் நூற்றூண்டிலிருந்தவரென வெண்ணப்படுகிற சேக்கிழார் கொடுங்கோளூரை வஞ்சியென்றும், சிலப் பதிகாரத்து உரையாசிரியர்கள் திருவானிலைக்கரூர் வஞ்சியன்று அது மலைநாட்டிலுள்ளதென்றும் கூறியுள்ளமைாலும், மணிமேகலையுரையாசிரி யர் 21-ம் காதை 91-ம் வரியில் வஞ்சியென்பதற்கு "கருவூர் இது சேர

களுடைய இராசதானி மலைநாட்டிலுள்ளது" என்று எழுதியுள்ளதினால் சேரன்செங்குட்டுவனுக்கு இராசதானியாயிருந்த வஞ்சிமாநகரெனப்பட்டதியாது என்னுமாராய்ச்சிக்கு நிமித்தமாயது. ஆகையின் மேற்சொன்ன உரையாசிரியர்களி னபிப்பிராயத்தைக் கவனியாமலே சிலப்பதிகாரத்தும், மணிமேகலையினுமேயுள்ளதும் இவ்விடயத்துக்கேற்றதூஉமாய பொருத்தங்களை யாராய்வாம்.

கொடுங்கோளூரை வஞ்சியெனவும், மகோதையெனவு மான்றோர் கூறியுள்ளார். அதைக்கரூரென வெவ்விடத்து ங்கூறவில்லை. திருவானிலைக்கரூரையும் வஞ்சியெனக் கூறியுள்ளாரென்பதும் கவனிக்கத்தக்கது.

I. பண்டைக்காலத்தே தமிழ்நாட்டை மூன்று பாகுபாடுகளாக்கி அவைகளைக் குணநாடென்றும், குடநாடென்றும், தென்னாடென்றும் ஆன்றோர் கூறுவாராயினர். அந்நாடுகளுக்கரசரை முறையே குணதிசைக் காவலன், குடதிசைக்காவலன், தென்றிசைக்காவல னென்றும் அழைத்துள்ளார். இப்பாகுபாடும் இவ்விராச்சியங்களும் சிருட்டிகாலந்தொடங்கியே யுண்டாயதெனவும் கூறியுள்ளார். இவைகளில் குடபுலத்தை யாண்ட வரசர்களுக்குச் சேரனென்றும் சேரலனென்றும் அவராண்ட நாட்டுக்குச் சேரநாடென்றும் பிரசித்தம். அதன்மேற்கெல்லை மேலைக் கடலென்றும் கூறியுள்ளார், சேரலனென்பது வடமொழியிற் புகுந்து திரிந்து இப்போதைக்குக் கேரளமென்றாயதென்பதூஉம் அப்பெயர்தான் தற்காலம் அதிகமாய் வழங்கிவருவதென்பதூஉம், நன்கறிந்த விடயம். சேரனுக்குக் குடநாடு காவலனென்றும், குட்டநாட்டுக் கோவென்றும், மலைநாட்டரசென்றும், மலாடனென்றும் இலக்கியங்களிலாங்காங்குகாண்டலும் தெற்றெனத்தெரியக்கிடக்கின்றது. அங்ஙனமிருக்க அவ்விராச்சியத்தின் இராசதானி மலைநாட்டிலேயேயிருந்திருக்கவேண்டுமேயொழிய கிழக்கேயுள்ளதும் மலையேயில்லாததூஉம் மலைநாட்டுக்கும் மேல்கடலுக்கும் வெகுதூரத்துள்ளதூஉமாய திருவானிலைக்கரூர் இராசதானியாகவிருந்ததென்பது யுக்திக்குப் பொருந்தவில்லை. சோழரும் பாண்டியரும் விளிந்து, இருந்தார்களோவில்லையோவென்று போய காலமாய இப்போதைக்கும் கொச்சி, திருவாங்கூர் இராச்சியங்களில் பண்டைக் காலத்துச் சேரின் சந்ததியாராகிய வரசர்களாண்டுவருவதையும் ஆங்

காங்காங்கு க்ஷத்திரியராகிய சிற்றரசர்களாண்டுவந்து இப்போதைக்குக் குடிகளால்மட்டும் அரசரென்றழைக்கப்பட்டு சீரும் சிறப்புமின்றியிருந்தலும் பாக்கக்காணலாம். எந்நாளும் சோழரோடு போர்புரிந்து பாது காத்துப் போற்றிவைத்திருப்பதும் சிலநாள் சோழர்கையிற் பறிகொடுத்தும் மிகவும் வருந்தி மீட்டுமிருந்துவந்திருக்கிற திருவானிலைக்கருவூரை சேரருக்கு இராசதானியாயிருந்ததென்பதூஉம் ஒவ்வாமலிருக்கிறது.

II. குட்டன் குட்டுவனென்னும் பெயர்கள் இப்போதைக்கும் மலையாளத்தில் சாதாரணமாய் வழங்கிவருவதையும் வேறு தமிழ்நாடுகளில் வழங்காமையும் அறியத்தக்கது. அப்பதங்களுக்கு சிறியவனென்றும், குழந்தை, மகனென்ற பொருளுமப்பொருளிலேதானே நூற்றுக்கு ஐம்பது பெயரை தற்காலமழைப்பதூஉங் காணலாம். செங்குட்டுவனென்பதற்குச் சிவந்தசிறுவனென்று பொருளும் குட்டநாடென்பதற்குச் சிறியநாடென்று பொருளுமாகும். அங்ஙனம் கருவூரிலாவது அதையடுத்த வேறு தமிழ்நாட்டிலாவது அம்மொழிபயின்றுவராமையும் நோக்கின் சேரன் செங்குட்டுவன் பிறந்ததூஉம் அரசாண்டதூஉம் இப்போது மலையாளமென்றழைக்கப்படுகிற நாட்டிலேயே யிருக்கவேண்டுமென்பது அறியக்கிடக்கின்றது.

III. சேரன் செங்குட்டுவன் மலைகாண்குவமென இளங்கோவடிகளுடனும், வேண்மாளோடும் விளையாட்டுவிரும்பிய விறல்வேல்வானவன் ஒருநூற்று நாற்பதியோசனை விரிந்தபெருமால்களிற்றுப் பெயர்வோன் போல் நால்வகைத்தானையோடும் சென்றுமலைகளினடுவில் பேரியாற்றங் கரைமணலில் தங்கினனென்று சிலப்பதிகாரம் காட்சிக்காதையில் கூறியுள்ளது நன்கறிந்ததே. அவன் நீங்கிச்சென்ற வஞ்சிமுற்றம் கருவூரின் கண்ணதேயாயின் அவ்வூருக்கித்தனை தூரத்தல்லாததுமயலாயதூஉம், எளியநெறியுடைத்தாயதூஉம், தனக்கே சேர்ந்ததூஉமாய கொல்லிமலையிருக்க வெகுதூரத்தும் வழியில்லாததும் வேற்றரசர் புலத்துட்புகுந்து செல்லவேண்டியிருப்பதூஉமாய பேர்யாறு பிறக்கும் மலைகளுக்கு நடுவே விளையாட்டாகச் சென்றானென்பது நம்பத்தக்கதன்றாயினமைகாண்க. சேரன் பேரியாற்றுக்கரையில் தங்கியபொழுது "குன்றக்குரவையொடு கொடிச்சியர்பாடலும்" முதலாக "இயங்குபடையரவமோடியாங்கணுமொலிப்ப" வீருகவுள்ளவோதைகளைக்கேட்

டும் மலைபடுதிரவியமாய யானைவெண்கோடு" முதல் "தேன்மொழிக் கிள்ளை" யீருகமலைமிசைமாக்க டலைமிசைக்கொண்டு கொணர்ந்தவை யெல்லாம் கொல்லிமலை முதலாய சிறிய மலைகளிற் கிடையாமையும் அவன் சென்றமலைகளிலுள்ளவையென்பதையுமுற்றுநோக்கின் அவனீங் கிப்போய வஞ்சிமுற்றம் கருவூரிடத்ததன்றென்று தெரியக்கிடக்கிறது. தவிர சேரன் செங்குட்டுவன் வஞ்சிக்குத்திரும்பிப்போந்தது ஒரேநாளி லென்பதற்குத்தக்கவாதாரம் சிலப்பதிகாரத்தின்றுயினும் மலையினின் றும் வஞ்சிக்குண்டாயநெறி அதிகதூரத்தல்லாதது பெறப்படுமாதலால் வஞ்சிமாநகர் திருவானிலைக்கருவூரான்றென்றே துணியத்தக்கவாதாரம் பொருந்தியது காண்க. அதன்றியும் மலைபடுதிரவியமாய "யானை வெண்கோடு" முதலியனவும் ஆங்கே கேட்கப்படுவனவாகிய "குன்றக் குரவை" முதலியனவும், பார்க்கப்படுவனவாகிய "நெடியோன்மார்பி லாரம் போன்ற பெருமலை" முதலியனவும் கொல்லிமலை யிலோவல்லது கருநுக்கணித்தாயவேறெந்த மலையிலுண்டாயிருப்பினுமுண்டாயிராம லிருப்பினும் விளையாட்டைக்குறித்துப் பேரியாறடைந்ததன் கரைவழி யேபுகுந்து மலையின்னுப்பண் சென்றது இயற்கையன்றென்று தள்ளவுங் கூடுமாதல் காண்க.

IV. "வெண்டலைப்புணரியின்விளிம்புசூழ்போத" முதலியவடி களால் வஞ்சிமாநகர் மேற்கடற் கண்ணுண்டாய தென்று நினைப்பது இழுக்காமென்று ஸ்ரீமான் உ. வே. ரா. இராகவையங்கார் கூறுவர். அதற்குச்சான்றாக "வஞ்சியங்கானல் வெண்டலைப்புணரி யெனவிளங்க வுரைக்கவில்லை" யென்றும், செங்குட்டுவன் ஒருவழியிலும் "தண்டத் தலைவருந்தலைத்தார்ச் சேனையும்" மற்றொருவழியிலும் போயினரென்று பொருள்கொண்டும், கடலையடைந்தாரென்பதையிளங்கோவடிகள் சிறப் பித்துக்கூறியுள்ளாரெனக்காட்டியும் தமிழரசர் வழக்கப்படி வலமாகச் செல்வான் குணகடலடைந்தும தன் கரைவழிச்சென்றானென் றெடுத்துக்கொள்ளுவதே அவ்வாசகங்களுக்குரித்தாய பொருளென்றும் வற்புறுத்தியுள்ளார். முதலிலிளங்கோவடிகள் தம்வாசகங்களில் கடலை யடைவதைச் சிறப்பித்துக்கூறினாரென்பது சிறிதும் காணப்படவில்லை. மேல்கடற் கரைவழிச்சென்றிருந்தால் "வஞ்சியங்கானலென்று" சொல்லி யிருப்பர். கீழ்கடற்கரைவழி சென்றிருத்தலால் கானலைக்குறிக்கவில்லை யென்பதூஉமோவ்வாமைகாண்க. வெண்டலைப்புணரி யென்பதை குட

கடலெனக் கொள்ளின் தூசிப்படையும், சேனைத்தலைவரும் மட்டுமவ் வாற்றானே போயினர் செங்குட்டுவன் வேறாயாற்றானே போயினனெனப் பொருள்படுமென்று முரைத்தார். அங்ஙனம் பொருளாமாறு காண வில்லை "உலகமன்னவனொருங்குடன் சென்று" எனத் தெளிவுறக் கிடப்பதும் கவனிக்கத்தக்கது. தமிழரசர் வலமேபோயிடமே வருவது வழக்கமெனப்பகர்ந்து கோவூர் கிழார்பாடிய "குணகடல் பின்னதாக" எனும்பாட்டை மேற்கோளாகவுங் காட்டியுள்ளார். அம் மேற்கோளுக்குப்பொருள் அங்ஙனமமையவில்லை. அங்ஙனமமையினுமவர் கூறியபடி யாதாமொருவழக்கத்தையு மவண் குறிக்கவில்லை. சோணாட் டரசரும் தென்னாட்டரசரும் வடநாட்டுக்குப்படையெடுத்துப்போவதென் றால் குணகடலோரம் செல்வதுதான் அவர்க்கெளியநெறியாகுமாதலா லவ்வண்ணம் சென்றனரென்று சொல்லலாமே யொழிய தமிழரசர்கள் மாத்திரம் தமக்காக வேறு வழக்கமேற்படுத்திக்கொண்டாரென்பது பொருளல்ல. அங்ஙனம் ஸ்ரீமாந். ஐயங்காரவர்கள் சொல்லியவாறு சேரன் செங்குட்டுவனும் சேனையும் கருவூரினின்றும்புறப்பட்டு குணகடலடைந் திருந்தாலதன் விளிம்புசூழ்போய் நீலகிரியடைவ தெங்ஙனமென்று பூகோளசாத்திரவல்லுனர் சங்கிப்பரன்றோ. ஆகையின் ஸ்ரீமாந். ஐயங் காரவர்கள் வஞ்சிமாநகர் திருவானிலைக்கரூரென்ற தம் கொள்கைக் கிணக்குமாறு இளங்கோவடிகள் தெளியக்கூறியுள்ள பொருளைக்கொள் ளாமல் வேறுபொருளைக்கூறி இடர்ப்படுகிறாரென்றன்றோ முடியும். அவ் வடிகள் செங்குட்டுவனு மவன்படையும் போய நெறியைக்கூறியுள்ளதில் வஞ்சியைநீங்கியவுடன் கடற்கரைவழியேசென்றுமலைமேலேறி நிலைநாட்டி னிழிந்து நீலகிரியின்சாரல் சேர்ந்தானென்று பொருள்படுமாறு தெளி வாகப்பாடியுள்ளார். வஞ்சிமாநகர்க் கடற்கரைக்கண்ணதோ நாட்டினகத் ததோ மேற்கடற்கணித்தாயதென்பது சிலப்பதிகாரத்தின் கால்கோட் காதையினடிகளினின்றும் தேற்றமெனக் கொள்க.

இவண் நீலகிரியென்பது அப்பெயர்பெற்ற மலைத்தொடரைக் குறிக்கவில்லை யப்பெயரை யுடைத்தாய வானுறவோங்கி யிலங்குமொரு சிகரம் தற்போது மலைபாளமெனவழைக்கப்படும் நாட்டினின்று செங்குத் தாகவெழுந்து நிற்பதூஉமதன் சாரலின்கண்ணே நிலம்பூர் முதலாயவூர் களும் கொடுங்கோளூரேயல்லாமல் அத்திசையினின்றும்வடக்கேபோகும் வழி அம்மலையடியிலுள்ளதென்பதூஉ மின்றும் காணக்கிடக்கின்றன.

ஆகலின் திருவானிலைக்களூரினின்றும் வடக்கே போவானொருவனுக் கந்நெறியாவது நீலகிரிமலைத்தொடரின்சார்பாவது படாநெறியென்பது யாருமறிவர். அரும்பதவுரையாசிரியரினபிப்பிராயமும் அங்ஙனமேயாய தூஉங் காண்க. ஆகையின் ஸ்ரீமாந் உ. வே. ஐயங்காரவர்களெடுத்துக் கொண்ட சிலப்பதிகாரத்தினடிகளும் அவைகளுக் கவர்கொண்ட பொரு ளும் திருவானிலைக்களூர்தான் வஞ்சியென்று நிரூபியாமல் அவ்வூர் வஞ்சி யாயிருக்கமுடியாதென்றும் வஞ்சியென்பது மேற்கே மலைநாட்டிலிருந்த வோர் நகரென்றும் நிரூபியாநின்றது தெளிக.

V. இனி ஸ்ரீமான்கள் உ. வே. ரா. இராகவையங்காரவர்களும், மு. இராகவையங்காரவர்களும் ஏனையோரும் எடுத்துக்காட்டி அவ்வவர் கொள்கைக்கிணங்கப் பொருள்கொண்டிருக்கும்,

"உரவுநீர்வையை ....
நெடுவேள்குன்றமடிவைத்தேறி"

(சிலப். 23-185–190).

என்னுமடிகளின்கருத்தை யாராய்வாம்.

இவண் "நெடுவேள்குன்றம்" என்பதை பழனிமலையாகத்தான் கொளல்வேண்டுமென்பது ஸ்ரீமான் உ. வே. ரா. இராகவையங்காரவர்கள் கருத்து.

கண்ணகி மதுரையை விட்டுத்தனியே போம்போது வஞ்சிமாநகரத் துக்காவது அந்நகருக்குப்போம் வழியிலாவது போவலென்னும் மெண் ணங்கொண்டுபோயினளாவென்பதை யுற்றுநோக்குவதின்றியமையாத தாகத்தோன்றுகிறது. அங்ஙனம் நோக்குழி வஞ்சிமாநகர் திருவா னிலைக்களூரென்று வைத்துநோக்கின் மதுரையம்பதியினின்றும் கரு வூருக்குவேறு எளிதாய செந்நெறியுண்டாயிருந்ததினால் வையையொரு கரைபோயும் மலையினிவர்ந்தும் பள்ளத்திழிந்தும் மிடருற்று நடக்கக் கருதியதென்பது பொருந்தாததாகும். அஃதன்றி வஞ்சியெனப்படுவது கொடுங்கோளூரெனவாவது மேற்கேமலை நாட்டகத்ததாயவொரு வூரெனவாவதுகருதின் கண்ணகிபோயவழி அவ்வூருக்குச்செல்லும் வழியாமென்பது போதரும். அங்ஙனம் கருவூருக்காவது கொடுங்

கோளூருக்காவது செல்வானுண்டாயவவசியம்யாதெனவிளங்கவில்லை.
சிலப்பதிகாரமும் கூறவில்லை. ஆகையின் அவள் போங்கால் யாதா
மொருவூருக்கும் போகக்கருதியவளல்லளெனத் தெளிவுறத்தோன்றக்
கிடக்கிறது. ஒருக்கால் பழனிமலைக்கேகுவலென்னக்கருதியவளாயின்
அவண்போவதற்குண்டாயிருந்தவவசியமுங்காண்கிலம். மதுரைமா
தெய்வமவள்கணவனைக்கூடுமாறவணேகெனப் பணித்திருந்ததெனக்
கொள்ளினதைச்சிலப்பதிகாரம் தெளிவுபடவுரைத்திருக்குமன்றே. அந்
நூலினுரைத்ததெல்லாம் பதினான்குநாட்களாகிய காலவரையொன்றே
யன்றி வேறுபாதுங்காணப்படவில்லை. ஆகையின் கணவனைப்பறி
கொடுத்தும் மொருமுலையையிழந்தும் மதுரையையெரியூட்டியும் பாண்
டியனுமவன் தேவியும் விளிவதுகண்டும் மனம்பொறாளாய் யாதானுமொ
ரிடத்தேகுவலென்னுமெண்ணமிலாதவளாய் மனமழன்று, இருத்தலு
மில்லேனிற்றலுமில்லேனெனக்காலுக்கெட்டிய வழிச்சென்றது வையை
யொருகரையாமெனக் கொள்ளக்கிடக்கின்றதெனத்துணிவதேதகுதி
யுடைத்து. அங்ஙனஞ்செல்பவள்பாண்டியநாட்டுமலைகளைத்தாண்டிச்சேர
நாட்டுமலைகளுக்குட்செல்லும் வழியிற்சென்றாளென்றும் மந்நெறியின்
கணுண்டாயிருந்த வோர்நெடுவேள் குன்றமடிவைத்தேறிப்பூத்த வேங்
கைக்கீழ் நின்றேங்கினளென்றுந்தெளிவுறவிருத்தல் காண்க. அந்நெடு
வேள்குன்றம் பழநிப்பதியாயிருப்பினத்துணை சிறப்பெய்தியதூஉம்
முருகன்றன் படைவீடாறினிலொன்றாயதூஉமாய குன்றத்தைத்தக்க
வாறுசிறப்பித்து இளங்கோவடிகள் கூறாதொழிந்ததும், பழனிமலையின்
மேல்வதிபவரெல்லாம் தேவரும், முனிவரும், பார்ப்பாரும், குமரனடி
யாருமன்றி குன்றக்குறவரன்மையானும், கண்ணகியைக் கண்டு
சேரனிடத்துப் போந்தவர் கண்டதைச்சொற்றவர் குறவரேயாதலானு
மவர்பேரியாற்றங்கரையிற் செங்குட்டுவன்றங்கியிருத்தலை யோர்ந்து
தன்னாட்டரசாகலினவனிடமிவ்வாச்சரிய நிகழ்ச்சியையுரைப்பான் செல்
லக்கருதி வஞ்சிமாநகரத்துக்குப் போம்வழிபிடித்து சென்றனரென்பதூ
உந் தெரியக்கிடத்தலின் கண்ணகியேறிய நெடுவேள்குன்றம் பழநிமலை
யன்றெனத்துணிக. அதுவன்றிப் பழநிமலையாவது
தன்றெற்கேயுள்ளவராகமலையாவது பாண்டிநாட்டைச்சேர்ந்தவையாக
லான் குறவரங்கிருப்பினும் சேரநாட்டரசனைக்காணப்போயினரென்பது
இழுக்காகும். பழநிமலைபாண்டிநாட்டதேயென்பதற்குப்பிரமாணம்

பழநித்தலபுராணம் சேர்கோன்சருக்கம் 7-ம் பாட்டைப்பார்க்க. பழநி மலையென்பதும் வரிசைமலையென்பதும் புதியபெயர்களேயொழிய சங்க காலத்து வழங்கிவந்தபெயர்களன்றுமாகையான் Madura District Gazetteer, Madura District Manual என்னும் புத்தகங்களிங்கு பயன்படமாட்டா. நெடுவேள்குன்றமென்பது முருகன் கோயிலைத் தனதுச்சியின் கணுள்ளவொருகுன்றெனக்கொளினு மமையுமாகலான் அதைப்பழநித்தலமெனக் கொண்டிடர்ப்படுவது சிறிதும் ஏற்புடைத் தன்று. ஆகையின் கண்ணகி அவலித்தேகிய வழிவஞ்சிமாநகரத்திற்குப் போயவழியாமென்று துணிவதேயேற்புடைத்து.

வஞ்சிமாநகரத்துக்குப் பண்டைக்காலத்துண்டாயிருந்த பாட்டை மதுரைமாநகரத்து வழியே சென்றதென்பது சிலப்பதிகாரத்தினின்றே தெரியவருகின்றது. பூம்புகார் பட்டினத்திருந்த தேவந்தியும் காவற் பெண்டு மடித்தோழியும் கண்ணகிக் குற்றதையு மவள் கோயில் கொண்டதையும் மாமறையோன்வாய்க்கேட்டு வஞ்சிமாநகர்க்கேகிச் சேயி ழையைக் காண்குமென்றுபோவான் றுணிந்துசென்றநெறியை யாராயுங் கால் வஞ்சிமாநகர் திருவானிலைக்கரூராயின் கோழிசென்று கருவூரடை வதே செந்நெறியென்பதூஉம், சிலப்பதிகாரம் நடுகோண்காதையினின்றும் செவ்வனே போதரும் அந்நெறியைவிடுத்து மிகச்சேணதாகிய மதுரை மாநகரையடைந்து வையையொருவழிக்கொண்டு மாமலைமீமிசையேறிப் போய்க் கண்ணகி தன்கோயிலடைந்தது திருவானிலைக் கருவூராகாமை யும் தெற்றெனவிளங்கும். அதுவன்றியும், பூம்புகார் வேந்தனன்னுடைக ஹுள்ள தோரூராகுமலவையில்வதியும் பார்ப்பான் பராசரனென்போன் சேரனது கொடைத்திறங் கேட்டு அவனைக்காண்குவமெனச் செல்வான் கொண்டதொருவழியும் மதுரையிடத்தாயதூஉம் அவணின்று காடு நாடு மூரும்போகி நீடு நிலைமலையம் பிற்படச்சென்று வஞ்சியெய்திப்பரிசு பெற்றுத்திரும்பியலவைக்கு மீட்டு மெய்துவான் கொண்டநெறியும் லேதேயாயதூஉம அந்நெறியிடத்ததாய தங்காலினிகழ்ந்ததூஉம் சிலப்பதி காரம் கட்டுரை காதையினின்றும் போதருவது தேற்றமன்றே. அங் ஙனமிருக்க அவன் போயவழியை யொப்புக்கொண்டும் அவன் காண்குவ மெனச்சென்ற சேரர் பெருந்தகையிருந்தரசாண்டுவந்தநகர் மலைநாட்டகத் தேயென்று மொப்புக்கொண்டும் சேரர்குலதிலகனுகிய செங்குட்டுவனைக்

காண்குவமெனவப்பார்ப்பான் செல்லவில்லை யென்றும் செங்குட்டுவனுக்கு மாற்றாந்தாய் வேளாவிக்கோமான்பதுமன்றேவி பயந்தமகனும் இளவலுமாய ஆடுகோட்பாட்டுச்சேரலாதனெனக்கொண்டு அவனிருந்தாசாண்டவூர் நறவென்றும் அது மேல்கடற்கரையையடுத்து மலைநாட்டகத்தேநிலவியதென்றும் ஸ்ரீமான் ரா. இராகவையங்கார் கூறுநின்றார். அலவைப்பார்ப்பான் பராசரனென்போன் காணப்போயது சேரன் செங்குட்டுவனையன்றென்பது எமக்குந்துணிபு. ஆயினும் பாலைக்கோதமனாருக்கு மவர்மனைவிக்கும் துறக்கங் கொடுத்தவன் ஆடுகோட்பாட்டுச்சேரலாதனன்று, இமயவரம்பன்றம்பிபல்யானைச்செல்கெழுகுட்டுவனென்பது சிலப்பதிகாரம் 23-ம் காதைக்கு அரும்பதவுரையாசிரியரெழுதியவுரையினின்றும், பழமொழி 316-ம் பாட்டினின்றும் ஸ்ரீமான் உ. வே. மு. இராகவையங்காரவர்களெழுதிய "சேரன் செங்குட்டுவனென்னும்" நூல் 11, 12ம்-ம் பக்கங்களினின்றும் போதரும். இப்பல்யானைச்செல்கெழுகுட்டுவன் செங்குட்டுவனுக்குச் சிறியதந்தையும் முற்பட்டவனுமாக விருத்தலினவனும்வார்த்திகனுக்குவயலூரைக்கொடுத்தவனும் அரசுகட்டிலிற்றுஞ்சியவனுமாய நெடுஞ்செழியனும் ஒருகாலத்தாசாண்டவரென்பதூஉம் அந்நெடுஞ்செழியனும் செங்குட்டுவனும் அத்தன்மையர் தானென்பதூஉமிழுக்காகாதெனவுணர்க. இதுவன்றியும் இக்காலத்திலும் மதுரைமாநகரினின்று கொடுங்கோளூருக்குச் செல்லவேண்டின் ஏறக்குறைய அதேபாட்டைதானுள்ளதையும் அது மோட்டார் இரதங்களோடிக்கொண்டிருக்கும் வனப்புவாய்ந்த தென்பதையும் அது பேரியாற்றங்கரையை யடைந்ததற்பினவ்வாற்றங்கரையைக் கொண்டேயொழுகக்கிடக்கின்றதையுங் கண்டு தெளியலாகும்.

VI. சிலப்பதிகாரம் நடுகற்காதை 67 முதல் 77 ஆமடிகளீறாகவுள்ளவடிகளில் சேரன் செங்குட்டுவன் இமையத்தினின்றும் கற்கொணர்ந்து வஞ்சிமாநகர்மேவி வாளாவிருந்தவமையத்தின் பொழுதுபோக்குவான் பறையூர்க் கூத்தச்சாக்கையனுடலின் மகிழ்ந்தனனெனக் கூறியுள்ளது. இதைப்பகுத்தறியுங்கால் சாக்கையனுடலென்பது திருவானிலைக்கருவூரிலாவ ததையடுத்த சோழபாண்டியர் நாட்டிலாவது கொங்குநாட்டிலாவது எப்போது மிருந்ததின்று. மலைநாட்டிலோவென்றால் பண்டுதொட்டு நாளைக்கும்வழங்கிவரும் சாக்கையார்கூத்தெனப்

படுவதை யறியாதார் யாருமிலர். மேலும் பறையூரெனப்படுவது தற்காலம் திருவாங்கூரிராச்சியத்தைச் சேர்ந்ததும், கொச்சிக்கு 25.மைல் தூரத்தும் கொடுங்கோளூருக்கு 5-மைல் தூரத்துள்ளதுமாய பரூரெனப்படுவதாய வூரையே குறித்திருத்தலின் சேரன்செங்குட்டுவனுக்கு இராசதானியாய வஞ்சிமாநகரம் திருவானிலேக்கருவூரா யிருந்திருக்கமுடியாதென்று மது மேற்கேமலைநாட்டிலுள்ள கொடுங்கோளூரோ வேறு யாதாமொரு வூரோவெனத்தான் துணிபப்போதிய வாதாரமாகுமெனக்காண்க.

VII. ஸ்ரீமான் உ. வே. மு. இராகவையங்காரவர்கள் சிலப்பதிகாரமணிமேகலைகளில் காணப்படும் சிற்சிலசொற்களை மலைநாட்டுவழக்கெனசிலர் கூறியதைமறுத்து அவைகள் பொதுவாக பழையதமிழ்வழக்குகளேயன்றி வேறில்லையெனக்கூறியுள்ளார். அதுவெமக்குஞ்சம்மதமே. அதினின்றும் போதருவதுயாதாமெனின் சேரன் செங்குட்டுவனிருந்தரசாண்டதும் மகாமேதாவியாகிய இளங்கோவடிகள்கற்றுக்கொண்ட தமிழ் வழங்கியதுமான ஊர் மலைநாட்டகத்ததேயெனத் துணிவ திழுக்காதென்பதே.

VIII. ஸ்ரீமான் உ. வே. மு. இராகவையங்காரெழுதிய சேரன் செங்குட்டுவனென்னும் நூலினின்றும் செல்வக்கடுங்கோவாழியாதனென்பவனும், இமயவரம்பன்சேரலாதனுமொருகாலத்தவரென்றும் சகலமுறையினரென்றுந்தெரிகிறது. ஆகவேசெல்வக்கடுங்கோவின்றகப்பன் அந்துவஞ்சேர லிரும்பொறையும், நெடுஞ்சேரலாதன்றகப்பன் உதியஞ்சேரலுமொருகாலத்தவரென்றும் ஏறக்குறையச்சமவயதினரென்றுந்தெரிகிறது. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்பாடிய "இவன் யாரென்குவையாயின்" என்னும்பாட்டு சேரமானந்துவஞ்சேரலிரும்பொறையை முன்னிலைப்படுத்திப்பாடியதாகப் புறப்பாட்டுகூறும். அவனத்தருணம் கருவூரிலரசாண்டுகொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. அவனுக்குமுன்னேயிருந்தவொரு சேரன் பெயர் கருவூரேறியவொள்வாட்கோப்பெருஞ் சேரலிரும்பொறை. இவன் கருவூரேறியவெனுமடையிலுல் விளங்கினவனுதலால் சேரருக்கியற்கையாகவே இராசதானியாயிருந்தவேறு ஊரினின்றும் போந்துகருவூரைத்தனக்கிருப்பிடமாக்கிக் கொண்டானென்றுணரப்படுகின்றது. இவன் வழித்தோன்றலாகிய அந்து வஞ்சேரலிரும்பொறை சோழன் முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி

யென்பவனுக்குப் பகைவனு மவனுற்றலினுற் கருவூரைத்தானே தப்ப வைத்துக்காத்துக்கொண்டிருந்தானென்றுந்தெரிகிறது. ஆகையின் இவருக்குமுன்னரே கருவூரைக்குறித்து சோழருக்கும் சேரருக்கும் பெரும்போர் விளைந்துகொண்டே யிருந்ததினுல் ஒள்வாட்கோப்பெருஞ் சேரலிரும்பொறை முன்னம் சேரருடைய வீரராற்காப்புப்பூண்டிருந்த கருவூரில் வந்தடைய வேண்டியிருந்ததென்றும் அது முதல் கருவூரு மொருதலைநகராக்கப்பட்டதென்றும் சேரவரசரிளையவங்கி சத்தினரும் தாயத்தாருமாகிய இரும்பொறைமரபின ராண்டுவந்தனரென்றும் தெரியக்கிடக்கின்றது. மேலும் மூத்தவங்கிசத்தனுகிய உதியஞ் சேரன் காலத்தேயோ அதற்கு முன்னரேயோ ஒள்வாட்கோப் பெருஞ்சேரலிரும் பொறை கருவூரில் வந்து வதிந்தனனென்று போதரும். ஆகையின் உதியஞ்சேரலின் பேரனுகிய செங்குட்டுவனும் அந்துவஞ் சேரலிரும் பொறையின் பேரனுகிய பெருஞ்சேரலிரும்பொறையும் ஒரேகாலத்தில் கருவூரில் வதிந்தனரென்பது அசம்பாவிதமாகும். இதனுற் போந்த தென்னவெனின் சேரன் செங்குட்டுவன் சேரவங்கிசத்துத்தாயத்தினரில் ஜேஷ்டவம்சத்தவனென்றுமவன் பழைய இராசதானியாகிய மலைநாட்டகத்தேயுள்ள வஞ்சிமாநகரத்திலரசாண்டவனென்றும் தெளியக்கிடக்கின்றது.

IX. இவைகளை முற்றும் பாகுபாடு செய்யின் திருவானிலைக் கருவூரையும் மலைநாட்டிலிருந்தசேரரது இராசதானியையும் ஆன்றோர் வஞ்சிமாநகரென்றுகூறியிருத்தலொன்று அப்பெபர்வாய்ந்ததற்கு பொற்கொடிமூதூர் முதலாயவடைமொழிகளினின்றும் வஞ்சிக்கொடியின்பூவே காரணமென்றுந்தெரிகிறது. சேரர் பண்டைக்காலத்திற்காத்துவந்த தேயம் மற்றிருதமிழ் மன்னர்காத்துவந்ததேயங்களைப்பார்க்கிலும் எத்துணைபங்கோபரவியிருந்திருக்கின்றது. சேரரிமயமலைகாறும் சென்று வெற்றிகொண்டபொழுது தங்கள் பொறியாகிய வில்லேயல்லாமல் சோழ பாண்டியருடைய புலியையும் மீனையுமிலச்சினையாகப்பொறித்துவைத்தனரென்று கூறப்படுதலானும் சேரர் மகாவீரர்களாகவும் பகைவர் புலன்களை யெப்போதும் கவரும் முயற்சியேயுடையராயிருந்தவரென்றுந்தெரிகிறது. அம்முயற்சிக்குத்தக்கதமிழ் நாட்டுவழக்கமாக வஞ்சிப்பூசூட்டிக்கொண்டிருந்தவரென்றும் அவர் தலைநகருக்கு தம்வெற்றிக்கறிகுறியாக வஞ்சியென்று பெயர் பூட்டினரென்றும் அதற்குச் சான்ருகப்

புலவரவர்கள் தலைநகரை வாடாவஞ்சியெனச் சிறப்பித்துக் கூறியுள்ளா ரென்றும் போதரும். இத்துணிவுக்கு மாறுயிரண்டு சங்கைகளேற்படு கின்றன. அவை (1) கொடுங்கோளூரை வஞ்சியெனச் சொற்றவர் சேக் கிழாரொருவரேயாயிருக்க திருவானிலைக் கருவூரை வஞ்சிமாநகரென வழைத்த புலவர் மிகுதியாகவும் சேக்கிழாருக்கனேக நூற்றுண்டுகளுக்கு முற்பட்டுச்சங்கபுலவராயுமிருக்கின்றனராகையினத்துணிபுவலியுடைத் தன்றென்பது (2) சேரவரசரில் செங்குட்டுவனைப்போன்று ஜேஷ்டவங் கிசத்தவராயிருந்தபோதிலும் புலவ ரவரைப்புகழுந்தருணத்தி லான் நைமணலையும் திருவானிலைக் கருவூரையுமேபுகழ்ந்து கூறியுள்ளதினுற் சேர்தலைநகர் மலைநாட்டகத்திருந்திருக்கமாட்டாதென்பதுமே. இவை களுக்குவிடைகூறுவாம் கருவூரேறிய வொள்வாட்கோப்பெருஞ் சேர லிரும்பொறை அந்துவஞ்சேரலிரும் பொறைக்கும், உதியஞ்சேரலுக்கும் முற்பட்டவனுயிருத்தலினுலும் கடைச்சங்கத்துப்புலவருள் சீத்தலைச் சாத்தனருக்கும், பரணருக்கும் முற்பட்டவராய நரிவேரூஉத்தலையார் காலத்தவனுதலினுலும் அக்கோப்பெருஞ்சேரலிரும் பொறைகருவூரேறி வஞ்சிப்பூச்சூடிபகைவராலாக்கிரமிக்கப்படானின்றிருந்த நாட்டைக்காத் துக்கருவூரை மிகவுஞ் சிறப்புப்படுத்தியிருந்ததனுலும் அவனுக்குப் பினனரசுக்குவந்து சேரநாட்டில் கிழக்கேயுள்ளபாகங்களுக்கவ்வூரை இராசதானியாக்கியுமாண்டுவந்ததினுலும் சங்கப்புலவர்கள் கருவூரையும் ஆன்பொருநையையும் மேம்படுத்திப்பாடியுள்ளாரென வேற்படுகிறது. (2) சிலபுலவர் ஜேஷ்டவங்கிஷத்தவராயும் மலைநாட்டின் தம் தலைநகரில் வதிந்து வந்த சேரரைப்புகழுங்கால் " தண்ணான்பொருநைமணலினும் பலவே " யெனவாழ்த்தியிருத்தலொருக்கால் அவ்வேந்தர் தங்கள் கீழ்த் தலைநகராய கருவூருக்குச் சென்றிருந்தபொழுது பாடியிருத்தலும் கூடும். அல்லதங்ஙனம்பாடியவப்புலவர் கருவூரையுமான்பொருநையை யும் நன்குயறிந்தவருமந்நாட்டவரேயாயும் மலைநாட்டிற் சென்று பேரி யாற்றைக்காணுதவராயுமிருந்திருக்கவுங் கூடும. தலாலச் சங்கைகளை யொழித்துச்சேர வரசர்களரண்களை யேற்படுத்தி வதிந்து வந்த நகர்களை வஞ்சிமாநகரெனச்சிறப்பித்துக்கூறியுள்ளாரென்னுந்துணிபு நிலைபெறுதல்காண்க,

X. இதுவன்றியும் கரூர், காஞ்சிவாய்ப்பேரூர், திருக்கொடிமாடச் செங்குன்றூர், கொல்லிமலையாகிய விவைகளடங்கிய நாட்டுக்கே கொங்க நாடென்று பெயருமிந்நாடுசேரநாட்டினொருபகுதியுமின்னாட்டுக்குத்தலை நகர் கருவூராயதூஉம் புலவர் நன்கறிவர். அதுவல்லாமல் கொங்க நாடென்னும் பெயர் கொங்கனென்னுமரசன் பெயராலுண்டாய தென்ப தூஉந்தேற்றம். ஆகையினிவணரசாண்டுவந்த விளையதாயத்தரசரை கொங்கிளங் கோசரென்று புலவர் கூறியுள்ளா ரென்பதையும் சேரசக்கிர வர்த்தியாகிய செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கண்டகாலத்தி வருமவண் போந்திருந்தனரென்று சிலப்பதிகாரம் கூறியுள்ளதையு முற்று நோக்கின் கண்ணகிக்குக் கோயில் கண்டது மலைநாட்டகத்தே யிருந்தபழைய விராசதானியெனவேற்படுகிறது. இளையகிளையினராகிய விரும்பொறையெனுமரசர் தம்மலைநாட்டுக்கடிக்கடிபோவதுமாங்குவதியுந் தம்மரசனாகிய சேரனுக் கடங்கிநடத்தலூஉம் காணப்படும். தவிர சேர சக்கிரவர்த்தியாகிய செஙகுட்டுவனுமவனகிளையினரும் தங்களிராச்சியத் திலெப்பகுதியினாயினும் பெரும் போருண்டாயகாலத்திலவணேகிப் போர்புரிந்து வெற்றிபெறுவது வழக்கமென்பது கொங்கர் செங்களத்து நடத்தியபோரினானும், பழையன் மாறனுடன் னடத்திய போரினானு மென்பது சோழரையும் நேரிவாயிலிற் கோறல்கண்டு தன்மைத்துன னாகிய இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியை சோழனாட்டுக்கதிபனாக்கி முடிசூட்டினனெனப்படுவதனானும் நன்குபோதருவது காண்க.

XI. மேற்கூறியுள்ள காரணங்களினாற்றிருவானிலைக்கருவூர்தான் மிகப்பழைமையாய சேரர்தலை நகரென்றுமவர் வலியிழந்து சோழருக்குப் பயந்துபோயபிறகே கொடுங்கோளூரைத்தலைநகராக்கியுள்ளாரென்பதற்கு நேர்மாறாகச்சேரவரசருக்கியற்கையாயமைந்தநாடுமலைநாடெனவுமவர்க் குத்தலைநகரம் மலை நாட்டகத்தேதான் தொன்று தொட்டிருந்ததென்றும் அவரெங்கேனும் படையெடுத்துச்சென்று வென்றுவந்தகாலத்துக் கரு வூரையு மதைச்சேர்ந்தநாட்டையும் கைப்படுத்தி யனேககாலம் சோழ ருடன்பொரு தவரைத்தோற்கடித்து நாட்டையுமந்நகரையுந் தமதாக்கி வெகுகாலமாண்டுவந்தனரென்றும் போதருவது காண்க. அதற்குப்பிறகு காலவித்யாசத்தினால் மலைநாட்டிராசதானியிலிருந்தமுடிமன்னர் வலிகுன் றிக் கருவூரினின்று தமக்காகக் காத்துவந்திருந்த விளைய கிளைஞரைத் தக்கவாறடக்கியாளுந்திறனுமிழந்துபோயதினிமித்தம் சேரமான்பெருமா ளாயனாருக்குமுந்தியோ சற்றுப்பிந்தியோ கொங்குநாடு சேரநாட்டினின் றும் விடுபட்டுச்சுதந்தரம்பெற்றிருந்ததென்றும் அன்றுதொட்டுக்கொங்கி லரசாண்டுவந்த மன்னரும் மலைநாட்டின்மேற் படையெடுத்ததைத் தங் கீழ்ப்படுத்த முயன்றனரென்றும் சேரவரசர் அவர்களை முறியடித்துத் துரத்தியஞான்றே கொல்லமாண்டினதுற்பத்தியென்றும், கொங்குநாட் டுக்கயலதாயும் சேரனாட்டினகத்த தாயுமிரானின்ற சித்தூரின்கண் கொங்கர்படையை பகவதியி னுதவிகொண்டழித்துத் துரத்தியதைச்

சிறப்பித்து கொங்கப்படையென்னுந்திருவிழா நாளைக்குங் கொண்டாடு கின்றனரென்றும், காணலாம். இக்கொங்கநாட்டுக் கிராமங்களில் கண்ணகியைக்குறித்துக் கேட்கினவள் மலையாளத்துக்குப்போய் பகவதியாயினளென்னு மைதிகம் கர்னபரம்பரையா யிருப்பதையுங் கேட்கலாம். ஆகையின் சேரன் செங்குட்டுவனுக்கு மவன் முன்னோருக்கும் பின்னோருக்குந் தலைநகராய் வஞ்சிமாநகரெனச் சிறப்புற்றிருந்த நகர் திருவானிலைக் கருவூரன்றென்று மங்நகர் மலைநாட்டகத்தேதா னிருந்ததென்றும் மேற்சொன்ன வாதாரங்களினின்றும் போதரும். அந்நகர் கொடுங்கோளூரா அல்லது திருக்கருவூரா வல்லது வேறு யாதாமோரூரா வென்னுமைய மின்னுந் தீர்ந்திலது. ஸ்ரீமான்கள் உ. வே. ரா. இராகவைய்யங்காரவர்களும், மு. இராகவைய்யங்காரவர்களும் எடுத்துக்காட்டியுள்ள சில வேதுக்களினுல் கொடுங்கேளூரையே வஞ்சிமாநகரெனத்துணிவதற்கு முடியவில்லை. அவையாதாமெனில் கடற்றுறைப்பட்டினமாய புகாரையிளங்கோவடிகள் ஐயந்திரிபறக்கடற்றுறைப்பட்டினமெனக்காட்டியுள்ளார். அவராவது பெருந்தலைச்சாத்தனாராவது வஞ்சிமாநகரத்தைச் சிறப்பிக்கவநேகவமயங்களேற்பட்ட பொழுதும் கடற்கரைப்பட்டினமாகச் சிறப்பித்துக்காட்டாமையுமவைபோல்வனபிறவும் கடற்கரையினுள்ள கொடுங்கோளூர்தான் வஞ்சிமாநகரெனத்துணிவதற்கிடங்கொடுக்கவில்லை. காலஞ்சென்ற ஸ்ரீமான் கனகசபைபிள்ளையவர்களின் நூலாகிய The Tamils 1800 years ago வெனும் புத்தகமின்னும் கிடைத்திலதினிமித்தம் திருக்களூரா வில்லையா வென்பதை யாராயமுடியவில்லை. ஆகையினிதையிவண்ணிறுத்தி வஞ்சிமாநகரெனச் சேரன் செங்குட்டுவன்காலத்துச் சிறப்புற்று வழங்கியது மலைநாட்டின் கணெவணிருந்தது, அதுயாது என்னும் விடயத்தை பின்னாராய்வாம்.

XII. இவ்விடயத்துட்பட்டதூஉம் நம்மாராய்ச்சிக்கேற்றதூஉமாய "செங்குட்டுவன்காலம்" என்னும் விடயத்தை யிவணெடுத்துக் கோடலேற்கனவே விரிந்துள்ள விவ்வியாசம் மிகப்பெருகிப் படிப்போர்க்காயாசமுண்டுபண்ணுமெனப்பயந்து பின்னெடுத்துக்கொள்வாமெனக் கருதி யிவணிறுத்துதும்.

சி. எஸ். செலுவைய்யர்.
(உதகமண்டலம்.)

அருவியன் காதை.

[கஙகூ-ம் பக்கத்தொடர்ச்சி.]

வேறு.

மங்கை உயிரன்ன மணவாளன் வரநோக்கிப்
பொங்குமதி கண்டகடல் போன்றுபொழில் யாவும்
கொங்குவிரி வாவிகளும் கோடுவிரி குன்றும்
அங்கருவி வீழ்தடமும் ஆர்வமுடன் ஆர்த்த. (66)

கொம்பர்இடை வைகும்இளங் கோகிலமும் ஒல்லை
பைம்புனலில் மூழ்கிஇசை பற்பல விரிக்கும்,
அம்பினிடை தூங்கிஅறி வோங்குமுது நாரை
தம்பெடையி னோடுமகிழ் தங்தொலி தெரிக்கும். (67)

மெல்லி தழ்விரி பூந்துணர் மேவிய
வல்லி கள்இவர் மாட்டு நுடங்கலோ
முல்லையம் முறுவல் உருதேசி தன்
இல்லையென் னிடையின் றெழில் எய்தலே. (68)

"நாறு பூங்குழல் நங்கையைப் போலொரு
வீறு வாய்க்கப் பெற்றேம்"என மென்கொம்பர்
ஊறு தேனும் ஒளிமலர் வாசமும்
தேறிச் சிந்தின; செப்பும் தரத்தவோ? (69)

நாடி நாள்மலர் நாயகன் உள்ளொடு
சூடி நின்றஅத் தோகையும் தோன்றல்பால்
ஓடிச் சென்றே உளமகிழ் வோடுரை
யாடிச் சென்ற தறைபகிற் பாமினி. (70)

தீதகன்ற தெளி வுறுஞ் சிந்தையும்
ஏத மில்குணம் யாவும் பொருந்துவீர்!
போது விண்ட அப்பூம்பெடை வண்டொடு
வாதுண்டே தும்பிக்"கென்றமடமயில். (71)

தன்னை நோக்கித் "தனியிருட் சோலைவாய்
மன்னு மாமணம் வாழ்மலர்க் கூந்தலாய்!
நின்னை நீத்துணேன் என்று மதுகரம்
பின்னைப் போவதைப் பார்"எனப் பேசினான். (72)

"கள் அவிழ்க்கும் கமலமென என
துள் அவிழ்க்கும் ஒளிமுகத்தீர்! குயில்
கிள்ளை பேசவும் கேட்டுத் தமிழிசை
விள்ள லாததென்?" என்ன வினவினாள். (73)

"எள்ளின் பூநடு ஏந்தும் குவளைபோல்
அள்ளிக் கொண்ட அழகுகண்ணாய்! மடப்
பிள்ளை பேசும் அன்றிப் பெரியார்முனே
உள்ளதோர்ந் தவரும் உரை செய்வரோ ?" (74)

என்று கூறிய இன்மொழி தன்செவி
ஒன்றலும், உள்ஒதுங்கினள், நாணினள்,
நின்ற காந்தனை நீத்துக் கடிதொரு
மன்றலங் கொம்பர் ஊடு மறைந்தனள். (75)

கொம்பின் பூவும் கொடியினப் பூக்களும்
பம்பிக் கற்றை பரப்பலில் பைந்தொடி
செம்பொன் மேனியும் சின்ன முறுவலும்
அம்பர் தேற்றி அறியகிற்பார் எவர்? (76)

அன்ன காலை அருவியன் ஆயிடைத்
துன்னி வேறொரு மாற்றம் தொடுத்தனன்:
மின்னனார்முனம் மெய்உரை செய்வதும்
என்ன வாம்என இத்தினை ஓர்ந்திலேன்." (77)

இவ்வுரை எரி யூட்டும் இழுதென
நவ்வி நோக்கினள் நாணம் வளர்க்கவும்,
ஒவ்வும் என்ற உருக்கிளர் கைக்கொடே
"அவ்வண் நோக்குதிர்" என்றழைத் தாள்திரு. (78)

(தொடரும்).

K. N. சிவராஜபிள்ளை B.A.,

உ

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(சுயி-ம் பக்கத்தொடர்ச்சி).

ஆற்றுக்குக்காரணமான மேகவருணனை.

6. பம்பி மேகம் பரந்தது "பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன்;
அம்பின் ஆற்றுதும்" என்(று), அகன் குன்றின்மேல்
இம்பர் வாரி எழுந்தது போன்றதே.

இ - ள். மேகம் (இமயமலைக்குமேலே விண்ணிலே) பரவினது, "சிவனுக்கு மாமன் (ஆகிய இமயபர்வதராசன் சூரியனால்) வெப்பமடைந்திருக்கிறான்: (ஆதலால் நாம் மேகமாக விண்ணிலே எழுந்து மழை) நீரினால் (அந்த வெப்பத்தைத்) தணிப்போமென்று அந்த மலைக்குமேலே கடல் பரந்தது போன்றது.

பம்பி - எழுந்து. பானு - சூரியன். மாதுலன் - மாமன். அம்பின் - நீரின், நீரினால். ஆற்றுதும் - தணிப்போம். இம்பர் - இவ்வுலகம். உமாதேவி இமயபர்வதராசன் குமாரியாதலால், நம்பன் மாதுலன் என்பது இமயமலையைக்குறித்தது. நம்பன் - சிவன். மாதுலன் - மாமன் நம்-(கடலாகிய) நமது; பன்னும்-சொல்லும், துதிக்கப்பெற்ற; மாதுலன்- (கங்கைநதியாகிய நமது மனைவியைப்பெற்ற) மாமன் (ஆகிய இமயமலை); என்றும் பொருள் கூறுவர். அவர் நம்பல் மாதுலன்எனச் சந்திபிரித்து நம்புதற்குரிய மாமனென்று பொருள்கூறலுமாமென்பர். நதிகளை மனைவியரென்றும் அவைகள் சங்கமிக்கும் கடலை அவற்றின் கணவனென்றும் கூறுதல் கவிமரபு. (சங்கமித்தல் - கலத்தல்). 'தாயர்வீடுவிட்டுத் தலைவர்வீடுநோக்கிச்செல்லும் கற்புடைத்தலைமகளிர், தாயர்வீட்டுக்கு என்றும் திரும்பிச்செல்ல எண்ணாரன்றே: அப்படிப்பட்ட கற்புடையார் போல, நதிகள் தாம் பிறந்தமலையினின்று புறப்பட்டுக் கடலைநோக்கிச்

செல்லாநிற்பன ; ஒருகாலும் திரும்பி மலைநோக்கிச் செல்லுவதில்லை' என்ற கருத்துப்புலப்பட ஓர் ஆங்கில கவி கூறியது மேலேகூறிய கருத்தைத் தழுவியது கவனிக்கத்தக்கது.

7. இரவி தன்குலத் (து) எண் இல் பல் வேந்தர் தம்
பரவு நல்ஒழுக் கின் படி பூண்டது ;
சரயு என்பது ; தாய்முலை அன்ன(து,) இவ்
உரவு நீர் நிலத் (து) ஓங்கும் உயிர்க்கெலாம்.

இ - ள். (கோசல நாட்டு ஆறு, என்றும் இடைவற்றுமல் ஒழுகுதலால்,) சூரியகுலத்தில் (ஒருவர் பின் ஒருவராக நெடுங்காலம் இடையீடின்றி) அரசாண்ட) எண்ணிறந்த அரசரது (இடையறுத) நல்லொழுக்கின் தன்மையை உடையது ; சரயு என்னும் பெயருடையது ; உலகத்தில் அபிவிருத்தி அடையாநின்ற உயிர்களெல்லாவற்றுக்கும் (தன் நீரையும் அதனுல் விளையும் உணவுபொருள்களையும் உண்ண உதவி, நீரும் உணவும் ஒருங்கே அமைந்த பாலைக்கொடுத்துக் குழந்தைகளை வளர்க்கும்) தாய்முலை ஒத்தது.

பரவு - புகழ்தற்குரிய. படி - தன்மை. ஒழுக்கு - ஒழுக்கம். என்பது - என்றுசொல்லப்படுவது. 'இல்வாழ்வான் என்பான்' என்னும் குறளில் 'என்பான்' எனப்படுவான் எனவருதல் காண்க. உரவு நீர்நிலம் - பரவியகடல் (சூழ்ந்த) பூமி. உரவுதல் (சங்க அகராதி). நீர்-கடல் (உரிச்சொல்நிகண்டு, இடப்பெயர்த்தொகுதி அ). உயிர்க்கெலாம்-உயிர்களெல்லாவற்றுக்கும் - உயிருள்ள சகல சராசரப்பொருள்களுக்கும்

'நீர்நிலம்' என்பது, பூமியைப் பொதுப்படக் குறிப்பதாயினும், இங்கே கோசலநாட்டைக்குறித்தது.

இருபது பாட்டுக்கள், அடங்கிய இந்த ஆற்றுப்படலத்தில் இந்தப் பாட்டிலேதான் 'சரயு' என்று கோசலநாட்டின் ஆற்றுப்பெயர் கூறப்பட்டது.

இப் பாட்டிலே கூறப்பட்டஉயிர்க்கெலாம் சரயு என்பது தாய்முலை அன்னது என்ற உவமை மிகவும் சிறந்த உவமை. உவமானப்பொருளுக்கும் உவமேயப்பொருளுக்கும் உள்ள ஒற்றுமை நயம், ஊன்றிநினை

யுந்தோறும் அதிகமாகப்புலப்பட்டு மேன்மேலும் பெருகும் மகிழ்ச்சியை விளைக்கின்றது. இதன் இனிமையை அவரவர் உணர்ந்தறியலாமே யன்றி, ஒருவர் எடுத்துச்சொல்லி மற்றொருவரை முழுதும் உணரச் செய்தல் முடியாதது. இத்தகைய உவமைகள், வான்மீகர், காளிதாசர், வள்ளுவர், கம்பர் போன்ற உத்தமோத்தமக் கவிகள் உள்ளத்திலேயே உதயமாவன.

மேற்கூறிய உவமையிலே மகர உகாரமும் லகர ஐகாரமும் சேர்ந்து வரநேர்ந்த துரதிட்டத்தினால், அந்த உவமை அடங்கிய அருமந்த பாட்டு, பல்கலைக் கழகமாணுக்கருக்கெனப் பதித்த பாலகாண்டப் பதிப் பொன்றில் நீக்கப்பட்டிருந்ததைப் பார்த்தமாத்திரத்திலே ஆச்சரியமும் விசனமும் அடைந்தேன். மாணுக்கருக்குபயோகமாமாறு பதிப்பிக்கும் புத்தகங்களில் காமமூட்டத்தக்க பகுதிகள் அவசியம் விலக்கற்பாலனவே யாம். அப்பகுதிகளில் "தாய்முலை" ஒன்றுகுமாறில்லையென்பதை ஷ பதிப்பாளர் சிந்தித்திலர்போலும். சூரியன் என்ற சோதிமுன் இருள் போலத், தாய் என்ற சொல்லின்முன் காமம் தலைகாட்டமாட்டாது. அம் மட்டோ, 'தாய்' என்றசொல், வெளிப்படையாகத் தன்முன் நிற்கப்பெறு மல் குறிப்பாக முன்நிற்கப்பெற்ற 'முலையூட்டல்' என்றசொற்றொடரைக் காமமூட்டுவதாகவாயினும் *அசப்பியமானதாகவாயினுங் கருதாமல் தமிழர்வழங்குதல்போல, அப்பொருள்தரும் ஆங்கிலத் தொடரை (Breast feeding) ஆங்கிலேயர் கூசாது வழங்குகின்றனர். ஆதலால், சர்வகலாசாலை ஆங்கில அதிகாரிகள் புத்தகப்பதிப்பு விஷயத்தில் சன் மார்க்க சம்பந்தமாக விதித்திருக்கிற விதிகளுக்கு இப்பாட்டு ஒருகால் தோற்றத்தில் விரோதமாயினும் உண்மையில் சிறிதும் விரோதமாகாது. இவ்விஷயத்தை இவ்வளவு விரிவாக எழுதியதன்காரணம், மாணுக்கருக் காகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிற சில புத்தகங்களில் காமத்தை உண் டாக்கி வளர்ப்பனவும் சபைக்குத் தகாதனவும் அல்லாத சில பாட்டுக் கள், விசேடமாகப் போற்றத்தக்க சிறப்புடையனவாயினும், இப்பாட்டுப் போல அநியாயமாக விலக்கித் தள்ளுண்டிருப்பதைப் பார்த்த வருத்த மும் இனி அப்படிப்பட்ட பாட்டுக்கள் விலக்கப்படாது பதிப்பிக்கப்பட வேண்டுமென்ற விருப்பமுமே.

---

* அசப்பியம் - சபைக்குத்தகாதது.

8. முல்லையைக் குறிஞ்சி ஆக்கி, மருதத்தை முல்லை ஆக்கி,
புல்லிய நெய்தல் தன்னைப் பொரு அரும் மருதம் ஆக்கி,
எல்லையிற் பொருள்கள் எல்லாம் இடை தடு மாறும் நீரால்
செல்லுறு கதியிற்செல்லும் வினையெனச் சென்ற(து) அன்றே.

இ - ள். (அந்த ஆறு, குறிஞ்சிநிலப்பொருள்களைக்கொண்டுவந்து நிறைத்து அப் பொருள்களால்) முல்லைநிலத்தைக் குறிஞ்சிநிலமாக்கி, (அவ்வாறே முல்லைநிலப் பொருள்களால்) மருதநிலத்தை முல்லைநிலமாக வும் (மருதநிலப்பொருள்களால்) நெய்தல்நிலத்தை மருதநிலமாகவும் செய்து, அந்தந்த நிலத்துப்பொருள்களெல்லாம் (தந்தம்நிலத்தைவிட்டு வேறுநிலம்போய்த் திணைமயக்கமாக) இடம் தடுமாறச்செய்யும் தன்மை யினால், (அந்த ஆறு, தன்னை [வினையை]ச் செய்த உயிரை அது முன் னிருந்த பதவியினின்று) செல்லுதற்குரிய (வேறு)பதவிக்கு (க்கொண்டு) செல்லும் வினையைப்போலச் சென்றது.

புல்லிய - இழிந்த; (மருதத்தை அடுத்துப்) பொருந்திய (எனவு மாம்). பொரு அரும் - ஒப்பில்லாத - சிறந்த. எல்லையிற்பொருள்கள் - (அந்தஅந்த நிலத்து) எல்லையில் உள்ள பொருள்கள். இடைதடு மாறும் நீரால் - இடம் மயங்கச்செய்யும் தன்மையினால். 'தடுமாறல், என்றதன்வினை தடுமாறுவித்தலென்று பிறவினைப்பொருள்பட நின்றது. இவ்வாறு இந்நூலில் வேறு சில இடங்களில் தன்வினை பிறவினையாகப் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. நட்புக்கேட்படலம் எடு-ம் பாட்டில் 'விலகும்' என்பது விலக்கும், என்று பொருள்பட வருதல்காண்க. இக் கவியில் 'சென்றது' என்றதற்கு, முன்கவியிலுள்ள 'சரயு' என்பது எழு வாய் அன்று. ஏ - அசைகள்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகியநால்நிலங்களுள் தானிய விளைவு மிகுதிபற்றி மருதத்தைப் 'பொருவருமருதம்' என்றும் அவ் விளைவு குறைதல்பற்றி 'புல்லியநெய்தல்' என்றும் கூறினரெனல்பொருந் தும். மலையில் உற்பத்தியாகிய ஆறு, மலையடுத்த குறிஞ்சிநிலத்துப் பொருளைவாரிச்சென்று அந் நிலத்துக்கடுத்துள்ள முல்லைநிலத்திற் சேர்த்து, அதனில் உள்ளபொருள்களை அதற்கடுத்த மருதநிலத்திற் சேர்த்து அதன்பொருளை அதற்கடுத்த நெய்தல் நிலத்திற்சேர்த்த வர லாறு கூறப்பட்டது.

9. கல்லிடைப் பிறந்துபோந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லை இல் மறைகளாலும் இயம்(பு)அரும் பொருள் ஈ தென்னத்
தொல்லையில் ஒன்றே ஆகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்போற் பரந்த(து)அன்றே.

இ - ள். (இமய) மலையிலே உற்பத்தியாகி ஓடிக் கடலிலேசேர்ந்த (அந்த நதி) வெள்ளமானது,—அளவில்லா வேதங்களாலும் சொல்லுதற் கரிய (பரம்) பொருள் (போல்வது) இது என்று சொல்லும்படியாக, ஆதியில் ஒன்றேயாகி (ப்பின்பு பலபிரிவாய் ஏரி குளம் முதலியநீர்த்) துறைகள் ஒவ்வொன்றிலும் பரவிய தன்மையால், பலபெருஞ் சமயங்களும் (தம்தம் தெய்வமென்று) கூறும் (ஒரு பரம்) பொருள் (பலவாய் எங்கும் வியாபித்தது) போல வியாபித்தது.

கல்இடை - (இமய) மலையில். போந்து - சென்று. நீத்தம் - (சரயு நதியின்) வெள்ளம். தொல்லை - பூர்வம், ஆதி. துறை - நீர்த்துறை; இடம். சூழ்ச்சி - ஆராயும்படியான தன்மை (யால்). பொருள் - வஸ்து; கடவுள்.

'சூழ்ச்சி'யின்பின் ஆல் உருபு தொக்கது; இதுபோலத் 'தையல் தளிர்க்கை தடக்கை பிடித்தான் (கடிமணப்படலம் கூ0) என்பதில் 'தடக்கை'யின் பின் ஆல் உருபு தொக்கதனை நோக்குக.

10. தாது (உ) கு சோலை தோறும், சண்பகக் காவு தோறும்
போ(து)அவிழ் பொய்கை தோறும், புதுமணற் றடங்கள் தோறும்,
மாதவி வேலிப் பூக வனம்தொறும், வயல்கள் தோறும்,
ஓதிய உடம்பு தோறும் உயிர் என உலாய(து) அன்றே.

இ - ள். (அந்த ஆற்றுவெள்ளம், பலமரக்) காவுகள், சண்பகச் சோலைகள், தடாகங்கள், மணற்கேணிகள், கமுகவனங்கள், வயல்கள் ஆகிய இவைகளெல்லாவற்றிலும் (சென்று,) எல்லா உடம்புகளிலும் உயிர் (புகுந்து உலாவுதல்) போல உலாவியது.

தாது - பூந்தாது, மகரந்தத்தூள். உகுதல் - சிந்துதல், போது - மலரும் பருவத்தினையுடைய அரும்பு. அவிழ்தல் - விரிதல் - மலர்தல், மணற்றடம் . மணற்கேணி. மாதவி - குருக்கத்திமரம். பூகம் - கமுகு. உயிர்என - உயிர் (புகுந்து உலாவுதல்) போல.

உயிரின் சம்பந்தத்தால் உடல்கள் செழித்திருத்தல் போல, சரயு நதிச் சலத்தின் சம்பந்தத்தால் சோலைகள் முதலியவை செழிப்புடையன என்பது கருத்து.

நாட்டுப்படலம்.

11\. தண்டலை மயில்கள் ஆடத், தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக், குவளை கண் விழித்து நோக்கத்,
தெண்டிரை எழினி காட்டத், தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம்வீற் றிருக்கும் மாதோ!

இ - ள். (கோசலநாட்டிலே) சோலை (ஆகிய நாடகசாலை) யிலே மயில் (களாகிய நடனமாதர்) கள் நர்த்தனஞ்செய்ய, (செந்) தாமரை (க்கொடிகளாகிய பெண்) கள் (மலர்களாகிய) தீபங்களை ஏந்த, மேகங் (களாகிய மத்தளகாரர்) கள் (இடிமுழக்கமாகிய) மத்தளமுழக்கம்செய்ய (தடாகங்களாகிய நாடகத்திரையிடுவோர்) அலைகளாகிய திரையிட, வண்டு (களாகிய யாழ்ப்பாணர்) கள் யாழ் (ஓசை) போல (ரீங்காரமாகிய) பாட்டுப்பாடக், குவளை (க்கொடிகளாகிய நாடகம் பார்க்கும் மாதர்) கள் (மலர்களாகிய கண்களைத் திறந்து (கவனமாகப்) பார்க்க, (நிகழும் நாடகத்தின் ஆடல் பாடல்களைக்கண்டு கேட்டுக்களித்து) மருதத்திணை (அரசு) வீற்றிருக்கும்.

தண்டலை - சோலை. முழவின் - மத்தளம்போல. தெண் திரை — தெளிவான அலை. எழினி - (நாடகத்) திரைச்சீலை. தேம்பிழியாழின்— இனிமை (உள்ள) தேன் (போன்ற இனிய) வீணை (ஓசை) போல.

இப்பாட்டுப் பொழிப்புரையில் 'அரசு' 'வீற்றிருக்கும்' என்ற எழுவாய் பயனிலை யிரண்டும், படர்க்கையில் அஃறிணை ஒன்றன்பாற்கும்

உயர்திணை ஆண்பாற்கும் பொதுவாகப் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. மருதத்திணை அரசுவீற்றிருக்கும்—மருதத்திணையாகிய அரசானது கொலுவிருக்கும்; மருதத்திணையாகிய அரசன் வீற்றிருப்பான்.

12. சேல் உண்ட ஒண்கணாரிற் றிரிகின்ற செங்கால் அன்னம்
மால் உண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
கால் உண்ட சேற்று மேதி கன்(று) உள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பால் உண்டு துயிலப் பச்சைத் தேரை தா லாட்டும் பண்ணை.

இ - ள். வயல்களிலே அன்னங்கள் தாமரைமலர்களாகிய படுக்கைகளிலே படுக்கவைத்த இளங்குஞ்சுகள், எருமைகள் (ஊரில் விட்டுவந்த) கன்றுகளை நினைத்துக் கனைக்க வடிந்தபாலை உண்டு தூங்கத் தவளைகள் தாலாட் (டுதல்போலச்கத்து)ம்.

'சேல் உண்ட' என்பதில் 'உண்ட' என்பது அதன் செம்பொருளாகிய 'புசித்த' என்று பொருள்படாமல் 'ஒத்த' அல்லது 'வென்ற' என்று பொருள்படநின்றது, 'உண்ட' உள்ள இடத்தில் 'வென்ற' இருப்பினும் செய்யுளிலக்கணமும் ஓசைநயமும் குன்று எனினும் உண்ட என்று கவி பாடியது தொடைநயங்கருதி. ஒள் கண்ணாரின் திரிகின்ற- ஒளிமிகுந்த கண்களையுடையமாதர்போல நடக்கின்ற. மால் - (மற்றெல்லா மலர்களினும் சிறந்த) பெருமை. உண்ட - பொருந்திய. நளினப்பள்ளி - தாமரைமலராகிய படுக்கை (யில்). வளர்த்திய - கிடத்திய. வளர்த்தல் — வளரச்செய்தல், கண்வளரச்செய்தல், உறங்கச்செய்தல் - உறங்கப் (ப்படுக்கையிலே) கிடத்தல்: என, இவ்வாறாக, 'வளர்த்தல்' என்பது 'படுக்கையில் (தூங்கும்படி)கிடத்தல்' என்று பொருள்படலுற்றது போலும். கால் உண்ட சேற்று மேதி - காலிற்பொருந்திய சகதியையுடைய எருமை - சகதியில் மிதித்துச் சகதி ஒட்டிய காலை உடைய எருமை. கன்று உள்ளி - (ஊரில்விட்டுவந்த) கன்றை நினைத்து. பண்ணை - வயல் (களிலே).

13. ஊர் நீர்படிந்(து) இந் நிலத் தே சில
கார்கள் என்ன வரும் கரு மேதிகள்,
ஊரில் நின்ற கன்(று] உள்ளிட, உண்முலை
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே.

இ - ள். (விண்ணிலேயன்றி) மண்ணிலே(யும்) மேகங்கள் (உண்டென்று) சொல்லும்படியாக, (மேகங்ள் கடல்நீரிற்படிதல்போலத்தடாக) நீரிற்படிந்து (தம் ஊர் நோக்கி) வரும் கரிய எருமைகள், (தம்மோடுகூட மேய்ச்சல் நிலத்துக்குவாாமல்) ஊரிலே நின்றுவிட்ட (தம்) கன்றுகளை நினைக்க, (அதனால் அக்கன்றுகள்) உண்ணும் பால் மடி (யிலிருந்து) வடிய, (அந்தப்பால் வயலிற்பாய்தலால்) நெற்பயிர்கள் செழித்தோங்கும்.

ஈரம் - குளிச்சி. உள்ளிட நினைத்தலால். தாரை கொள்ள - வடிய. சாலி - நெல்; ஆகுபெயராய் நெற்பயிரை உணர்த்தியது.

14. பெரும்த டம்கட் பிறை நுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க்(கு) ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே.

இ - ள்: மாதர்களுக்கெல்லாம் செல்வமும் கல்வியும் (ஒருங்கே) உண்டாயிருத்தலினால், (அவர்கள்) நாள்தோறும் (தரித்திரத்தினால்) வருந்தி (த்தம்பால்) வந்தோர்க்கு (வேண்டுவன) கொடுத்தலும் (விருந்தினர்க்கு) விருந்திடலுமன்றி உண்டாவன (ஆகிய வேறு சிறந்தவேலைகள்) எவை (இருக்கின்றன? ஒன்றுமில்லை).

செல்வம், இரவலர்க்கு ஈதலுக்கும் விருந்தோம்புதலுக்கும் சாதனம்; கல்வியறிவு அந்த ஈதலையும் ஓம்புதலையும் தக்கவாறு செய்தற்குச் சாதனம். இவ்வாறு கல்வியும் செல்வமும் ஒன்றற்கொன்று பொருத்தமாயிருத்தல்பற்றிப் 'பொருந்து செல்வமும் கல்வியும்' என்றார். கம்பர் காலத்தில் பெண்கல்வி பரவியிருந்ததென்பது இந்தக்கவியினால் பெறப்படுகிறது.

15. கலம் சு ரக்கும் நிதியம் கணக்(கு) இலா,
நிலம் சு ரக்கும் நிறை வளம், நல் மணி
பிலம் சு ரக்கும், பெறுதற்(கு) அரிய தம்
குலம் சு ரக்கும் ஒழுக்கம், குடிக்கெலாம்.

இ - ள். (அந்தநாட்டுக்) குடிகளெல்லாருக்கும், மரக்கலங்கள் (பிறதேசங்களினின்று கொண்டுவந்து) அளவற்ற திரவியங்களைக்கொடுக்கும்;

(பூமியின் மேலுள்ள) நிலங்கள் நிறைந்த விளைபொருள்களைக்கொடுக்கும்; (பூமியின் கீழ்உள்ள) சுரங்கங்கள் நல்ல இரத்தினங்களைக்கொடுக்கும்; (அவர்களது) பெறுதற்கருமையான குடிப்பிறப்பு (நல்) ஒழுக்கத்தைக் கொடுக்கும்.

கலம் (-மரக்கலம்) கணக்கிலா (-அளவற்ற) நிதியம் சுரக்கும் (-கொடுக்கும்) எனக்கூட்டுக. கணக்கிலா நிலமென்றும் கூட்டலாம். வளம் - (விளைபொருள்களாகிய) பலபண்டங்கள். பிலம் - கீழ்ப்பூமி (பில் உலோகங்களும் மணிகளும் அகப்படும் சுரங்கம்; அல்லது கனி).

16. கூற்றம் இல்லை,ஓர் குற்றம் இலாமையால்;
சீற்றம் இல்லை,தம் சிந்தையிற் செய்கையால்;
ஆற்றல் நல் அறம் அல்ல(து) இலாமையால்,
ஏற்றம் அல்ல(து) இழிதக(வு) இல்லையே.

இ - ள். (அந்நாட்டினர்க்குக் கொலை களவு நோய்க்கிடங்கொடுத்தல் முதலிய குற்றம் இல்லாமையினால் (அகால) மரணம் இல்லை. (அவர்களது நல்) எண்ணத்தினாலும் (நல் வார்த்தையினாலும் நற்) செய்கையினாலும் கோபம் (ஒருவருக்கும் உண்டாகக்காரணம்) இல்லை. நல்ல தரும காரியங்களன்றி (வேறொன்று) செய்தல் இல்லாமையால் (அவர்கள்) உயர்வடைதலன்றித் தாழ்வடைதல் இல்லை.

கூற்றம் இல்லை - நமன் இல்லை, மரணம் இல்லை, அகாலமரணம் இல்லை. சிந்தையில் - சிந்தையால், எண்ணத்தினால். ஆற்றல் - செய்தல். ஏற்றம் - உயர்வு. இழிதகவு - இழிவு, தாழ்வு. நல் அறம் அல்லது ஆற்றல் இலாமையால் எனக்கூட்டுக.

17. நெறி கடந்து பரந்தன, நீத்தமே:
• குறி அழிந்தன, குங்குமத் தோள்களே:
சிறிய மங்கையர் தேயும் மருங்குலே:
வெறியவும், அவர் மெல் மலர்க் கூந்தலே.

இ - ள். (அந்நாட்டிலே) வெள்ளங்களே நெறிகடந்து (கரை புரண்டு) செல்வன; (மக்கள் தத்தமக்குரிய நெறிகடந்து செல்லார்கள்;) மைந்தரது குங்குமம் அணிந்த தோள்களே (மாதரைத்தழுவி அக்குங்குமக்) குறி அழிவன; (தவசக்குவியல் திரவியசாலை முதலியவை களவு

செய்யப்பட்டால் தெரியும்படி இடும்—முத்திரைக்குறி அழிதல் இல்லை:) மாதர் இடைகளே சிறுமையுடையன; (அன்றிச் சிறுமையுடையார் இல்லை:) அவர்களது மலர்(மாலை) உடைய கூந்தலே வெறி (-வாசனை) உடையன; (அன்றி வெறி [-மயக்கம்] உடையார் இல்லை.)

'சிறிய'என்பதற்குச் சிறுமையுடையனவென்று பொருள்கொண்டதுபோல, 'வெறிய'என்பதற்கு வெறுமையுடையனவென்றும் பொருள் கொள்ளலாம். இப்பொருள்கொண்டால், மேலே 'மயக்கம் உடையார் இல்லை' யென்றதனை வெறுமை (—இன்மை - தரித்திரம்) உடையார் இல்லை'யெனக் கொள்ளல் வேண்டும்.

18. தாலி ஐம்படை தழுவும் மார்பிடை,
மாலை வாய் அமு(து) ஒழுகும் மக்களைப்,
பாலின் ஊட்டுவார் செம் கை, பங்கயம்,
வால் நிலா உறக், குவிவ, மானுமே.

இ. ள்: தாலியும் (அதனுடன் தாலிச் சரட்டிற் கோத்த) ஐம்படை அணியும் புரளும் மார்பிலே (அணைத்து ஏந்தப்பட்டு) வாய் நீர் வடியும் குழந்தைகளுக்குப் பாலூட்டுவார் (ஆகிய மாதர்களுடைய) கை (பாலுள்ளசங்கைப்பிடிக்கக்) குவிவது, வெள்ளிய நிலா உறத் தாமரை மலர் குவிவதனை ஒக்கும்.

ஐம்படை—ஐந்து ஆயுதங்கள்—திருமாலின் ஐந்து ஆயுதங்களாகிய சக்கரம் வில் வாள் தண்டு சங்கு ஆகிய இவைகளின் உருவம் அமையச்செய்த பொன்னணிகள். "தாலி ஐம்படை—தாலியாகிய பஞ்சாயுதம் புறநானூற்றுரை...........புற-என" (குமாரசுவாமிப்பிள்ளை கனகசுந்தரம்பிள்ளை பதிப்பு, பாலகாண்டம், அரும்பதவுரை), தழுவும்—பொருந்திய. மாலை—ஒழுங்கு (ஆக). வாய் அமுது—வாய்நீர். மாலைவாய் அமுது ஒழுகும் என்பதற்கு (த்தம் மார்பின்மேல்) மாலை (போல இரு கடைவாய் (நின்றும் உமிழ்) நீர்வடியும் என்றும் பொருள் கொள்ளலாம். மக்களைப்பாலின் ஊட்டுவார்—மக்களுக்குப்பாலை ஊட்டுவார். வால்நிலா வெண்மையான சந்திரிகை 'குவிவது' எனற்பாலது துவ்விகுதி தொக்குக் 'குவிவ' என நின்றது, திருஅவதாரப்படலம் கஉ-ம் பாட்டில் 'வருவது' 'வருவ' என வந்ததுபோல, கை, பங்கயம் குவிவ (னவற்றை) மானும் (—ஒக்கும்) எனவும் கொள்ளலாம்.

ஐம்படை, மாதருக்கும் பிள்ளைகளுக்கும் பொது ஆபரணமெனி னும், இங்கே தாலியோடு இயைந்து மாதர்க்குரிய ஆபரணமாகக் கொள்ள நின்றது. மாலைக்கு மாலை நேரமெனப் பொருள்கொண்டு அதனை 'வால் நிலா' வோடுகூட்டுவாரும் உண்டு: அது கடுங் கொண்டு கூட்டு; இன்றியமையாததுமன்று.

19. வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்:
திண்மை இல்லை, நேர் செறுநர் இன்மையால்:
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்:
வெண்மை இல்லை, பல் கேள்வி மேவலால்.

இ. ள்: (ஒருவருக்கும்) அற்பதரித்திரமும் இல்லாததனால் (இரப் பார் இல்லை, இரப்பார் இல்லாததனால்) கொடை இல்லை: எதிர்த்துப் போர் செய்யும் பகைவர் இல்லாததனால், வலிமை (செலுத்தற்கு இடம்) இல்லை: (எல்லாரும்) பொய் கூறாமையால் (எவரையும் இவர் உண்மை, சிறந்ததெனச் சிறப்பித்துக் கூறுதற்குரிய) உண்மை இல்லை: (எல்லா ரும் கல்வி) கேள்வி (அறிவு) பொருந்தியிருத்தலினால், (எவரிடத்தும்) அறிவின்மை இல்லை.

வண்மை—ஈகை. ஓர்வறுமை—சிறிது தரித்திரமும். திண்மை— வலிமை—பராக்கிரமம். நேர்தல்—எதிர்தல். செறுநர்—பகைவர். வெண்மை- வெளிற்றுத்தன்மை—அறிவின்மை.

ஒவ்வோரடியும் பொருள் முடிபுடைமையால், இப்பாட்டு அடிமறி மாற்றுப்பொருள்கோட்கு உதாரணமாம்.

இப்பாட்டில், முதல் மூன்றடியினும் முற்பாதியில் வண்மை திண்மை உண்மை யென்றநற்பொருள்களும், பிற்பாதியில் வறுமை பகைமை பொய்மை யென்ற தீப்பொருள்களும், இருபாதிகளினும் இன்மைகுறிக்கும் மொழிகளும் அமையப்பாடிய கவி, அந்த மூன்றடி களுக்கு முழுதும் பொருத்தமாக 'தண்மை இல்லை வெம் தாபம் இன் மையால்' 'ஒண்மை இல்லை பேதுறல் இலாமையால், என்பவைபோன்ற யாதாயினும் ஓர் அடியை நான்காம் அடியாகப் பாடாமல், அம்முதல் மூன்றடிகளுக்குக், குறைவான பொருத்தமுடையதாக, 'வெண்மை இல்லை பல் கேள்வி மேவலால்' என்று, முற்பாதியில் 'வெண்மை'

யென்ற தீப்பொருளும், பிற்பாதியில் ‘கேள்வி’ யாகிய நற்பொருளுடன் இன்மைக்கு எதிர்மறையாகிய உண்மைகுறிக்கும் ‘மேவல்’ என்பதும் உள்ள அடியை நான்காம் அடியாகப்பாடியது கவனித்து ஆராயத்தக்கது. [ஒண்மை—அறிவு (உ-ம்) ‘ஒண்மை உடையம் யாம் என்னும் செருக்கு’ வள். அசச. சங்க அகராதி.]

20. சோலை மா நிலம் துருவி, யாவரே
வேலை கண்டு, தாம் மீள வல்லவர்?
சாலும் வார் புனற் சரயு வும், பல
காலின் ஓடியும் கண்ட (து) இல்லையே!

இ. ள்: (அந்தக் கோசலமென்னும்) பெரிய தேசம் ‘(முடியச் சென்று) தேடி எவர்தாம் (அதன்) எல்லை கண்டு திரும்ப (வந்து சொல்ல) வல்லவர்? (ஒருவரும் இல்லை இது ஆச்சரியமன்று,) சரயு நதியே எண்ணிறந்த கால்களின் ஓடியும் (அத்தேசத்தின் எல்லை) கண்டதில்லையே!

சோலை—சோலைகளையுடைய—மாநிலம்—பெரிய தேசம்—துருவி தேடி. வேலை—எல்லை. சாலும்—மிகும்—திரண்ட வார் புனல்—நெடுநீர் நீள ஓடிச்செல்லும் நீர். கால், சிலேடையாய்க் கால் என்றும் வாய்க்காலென்றும் இருபொருள்படப்பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. காலின் 1. கால்களால்; 2. வாய்க்கால்களால்—வாய்க்கால்கள்வழியாக.

இப்பாட்டின் கருத்து, பெரிய சரயுநதி எண்ணிறந்த காலாலும் ஓடிக்காணமுடியாத கோசலநாட்டெல்லையைச் சிறியமனிதர் இரண்டு காலாற் சென்று காண்பதெவ்வாறென்றவாறு.

நகரப்படலம்.

21. செவ்விய, மதுரம் சேர்ந்த நற் பொருளின், சீரிய, கூரிய, தீம் சொல்
வவ்விய கவிஞர் அனைவரும் வட நூல் முனிவரும் புகழ்ந்தது வரம்(பு) இல்
எவ் உல கத்தோர் யாவரும் தவம் செய்(து) ஏறுவான் ஆதரிக் கின்ற
அவ் உல கத்தோர் இழிவதற்(கு) அருத்தி புரிகின்ற(து) அயோத்தி மா நகரம்.]

இ. ள்: அயோத்திமாநகரமானது,—நேரா (கப் பொருள்படுவ) னவும், (மனத்துக்கு) இனிய நயமான அர்த்தமுடையனவும், சிறந்தனவும் நுட்பமுடையனவுமாகிய (காதுக்கு) இனிமையான சொற்களைக் கொள்ளை கொள்ளும் (சடகோபமுனிவர்முதலிய தென்மொழிக்) கவி

வாணரும் (வான்மீகி முனிவர்முதலிய) வடமொழி (க் கவிவாணராகிய) முனிவரும் (வருணித்துப்) புகழப்பெற்ற (சிறப்புடைய) து : எல்லா உலகங்களிலும் உள்ளோரெல்லாம் தவஞ்செய்து ஏறியடைதற்கு விரும்புகின்ற பரமபதத்திலுள்ளோர் இறங்கியடைதற்கு விரும்புகின்ற (மகத்துவமுடைய) தாயுள்ளது.

எவ்வுலகத்தோரும் எனற்பாலது, செய்யுளாதலால், எவ்வுலகத்தோரென உம்மை தொக்கது. ஆதரித்தல்—விரும்புதல். இழிதல்—இறங்குதல். அருத்தி - விருப்பம்.

வைகுந்த நாதன் வைகுந்தத்தைவிட்டு (இராமனாக) அயோத்திக்கு வந்த மகிமையினால், வைகுந்தவாசிகளும் அந்த நகரத்துக்கு வரவிரும்புவரென்பதை உய்த்துணரும்படி கம்பர் கூறி, அயோத்திக்கு அரசராகிய "இராமர் போன இடம் அயோத்தி" என்னும் பழமொழிப்படி வைகுந்த நாதன் போன இடம் வைகுந்தமென்று வைகுந்தவாசிகள் அயோத்தியை வைகுந்தமாகக்கருதும் இயல்பை இனிது குறிப்பித்தார்

22. நிலமகள் முகமோ? திலகமோ? கண்ணோ? நிறை நெடு மங்கல நாணோ?
இலகு பூண் முலை மேல் ஆரமோ? உயிரின் இருக்கையோ? திருமகட்(கு) இனிய]
மலர் கொலோ? மாயோன் மார்பின் நல் மணிகள் வைத்த பொன் பெட்டியோ? மலரோன்]
உலகின் மேல் உலகோ? ஊழியின் இறுதி உறையுளோ? யாதென உரைப்பாம்?]

இ. ள்: அந்த நகரம், இராமபிரானாக அவதரித்த திருமாலின் மனைவியாகிய பூமிதேவியின் முகமோ? (அம் முகத்தைச் செயற்கையாக அலங்கரிக்கும்) திலகமோ? (இயற்கையாக அழகுசெய்யும்) கண்ணோ? (அவள்) மாங்கலியமோ? (அவள்) மார்பின்மேல் (அணியும்) ஆபரணமோ? (அவள்) உயிர்த்தானமோ? (திருமாலின் மற்றொருமனைவியாகிய) இலக்குமிக்கு (இருப்பிடமாயிகிய தாமரை) மலரோ? திருமால் மார்பில் (அணியும் கவுத்துவ) ரத்தினங்கள் வைக்கப்பெற்ற பொற்பெட்டியோ? பிரமாவின் உலகத்துக்கும் மேல் உலக (மாகிய திருமால்வாழும் வைகுண்ட)மோ? உகாந்த காலத்தில் (எல்லா இடங்களும் அழிந்தொழியத், தானொன்றே, தன்னிடத்தே திருமால் அவதரித்து வளர்ந்து

அரசாண்ட மகத்துவத்தினுல், அழியாமல் உயிர்கள் வாழத்தக்கதாய்) உள்ள வாசஸ்தலமோ? (இவற்றுள் அந்த நகரத்தை) யாதென்று (துணிந்து) சொல்வோம்?

இப்பாட்டு முழுதும் திருமால்சம்பந்தமான பொருள்கள் நிரம்பி யிருப்பது நோக்கத்தக்கது.

23. மே(வு)அரும் உணர்வின் முடி(வு)இலா மையினுல், வேதமும் ஒக்கும், விண் புகலால்]
தேவரும் ஒக்கும்; முனிவரும் ஒக்கும், திண் பொறி அடக்கிய செயலால்;
காவலிற் கலை ஊர் கன்னியை ஒக்கும்; சூலத்தால் காளியை ஒக்கும்;
யாவையும் ஒக்கும், பெருமையால்; எய்தற்(கு) அருமையால் ஈசனை ஒக்கும்.

இ. ள். (அந்த நகரத்து மதில்,) அறிவினுல் (எல்லைகாண இயலாமல்) முடிவில்லாதிருத்தலால், வேதங்களை ஒக்கும்; (மிகவும் உயர்வாய்) விண்ணுலகத்தை அடைதலால், விண்ணவரை நேரும்; வலியபொறிகளை (—இயந்திரங்களை) அடக்கியிருத்தலால், (ஐம் பொறிகளை அடக்கிய) முனிவரைப்போலும்; காவற்றொழிலால், துர்க்கையை நிகரும்; சூலம் தாங்கலால், காளிக்குச் சமமாம்; (வடிவம் பரிமாணம் இவைகளின்) பெருமையால், (மேருமுதலிய பெரிய பொருள்கள்) யாவற்றுக்கும் உவமானமாம்; அடைதற்கருமையால், கடவுளுக்குச் சமானமாம்.

மதில் பொறி அடக்குதல், காவலுக்குபயோகமாக வைத்திருக்கும் யந்திரங்களைத் தன்னிடத்துடைமையும், முனிவர் பொறியடக்குதல், ஐம்பொறி அடக்குதலுமெனப்பொருள்கொள்க. கலைஊர் கன்னி—கலை மானைவாகனமாக ஏறிநடத்தும் துர்க்கை.

(மதில்) யாவையும் ஒக்கும் பெருமையால்—(மதில்தான்) பெரிதா யிருத்தலால் (பெரியவைகளாயுள்ள) எல்லாப்பொருள்களையும் நேரும். யாவையும் ஒக்கும் (—பொருந்தும்) பெருமையால்' என்பதற்கு 'மண் ணும்விண்ணும் பரந்து யாவற்றையும்பொருந்தி வியாபிக்கும்பெருமையா லென்று மதிலுக்குப்பொருத்தமாகவும், யாவற்றையும்வியாபித்து பொருந் தும் சர்வ வியாபகனும் பெருமையாலென்று ஈசனுக்குப் பொருத்தமாக வும், பொருள் கொள்ளலுமாம். இவ்வாறு பொருள்கொண்டால், மதிள், யாவையும் ஒக்கும் பெருமையாலும் எய்தற்கருமையாலும் ஈசனை ஒக்கும் என்பது பெறப்படும். "ஒத்தல்—பொருந்தல் (உ-ம்) 'வானொத்த காட்சி நல்கும்' (தாயு பாயப்புலி 2.) (சிந்தா)" சங்க அகராதி.

24. பஞ்சி வான் மதியை ஊட்டிய அனைய படர் உகிர்ப் பங்கயச் செம் கால்,
வஞ்சி போல் மருங்குல், குரும்பை போல் கொங்கை, வாங்கு வேய் வைத்த் மெல் பணைத் தோள்,]
அம் சொலார் பயிலும் அயோத்தி மா நகரின் அழகுடைத்(து), அன்(று), என அறிவான்,]
இஞ்சி, வான் ஓங்கி, இமையவர் உலகம் காணிய எழுந்த(து) ஒத்துளதே.

இ. ள். வெண் சந்திரனைச் செம்பஞ் சூட்டினாற் போன்ற நகங்களோடு கூடிய செந்தாமரை மலரை ஒத்த சிவந்த பாதங்களையும், வஞ்சிக் கொடி போன்ற இடையையும், குரும்பைகளை நிகர்த்த கொங்கைகளையும் மூங்கில் நேரான மெல்லியதிரண்ட தோள்களையும் இனிய சொற்களையும் உடைய மாதர்கள் (ஆடல் பாடல்) பயிலும் அயோத்திமாநகரம் போலத், தேவலோகம் அழகுடையதோ, அன்றோவென அறிவதற்கு, (அதனைப்) பார்க்கும்பொருட்டு, (அந்த நகரத்து) மதில் உயர எழுந்தாற் போன்று (ஆகாயத்தை அளாவி) இருக்கின்றது.

பஞ்சி—செம்பஞ்சுக் குழம்பு வான்மதி—1. வால்மதி—வெண் சந்திரன்; 2. வானில் (—ஆகாயத்தில்) உள்ளசந்திரன்.—உகிர்—நகம் வஞ்சி—ஒருகொடி. வாங்குதல்—வளைதல், வேய்—மூங்கில். பணை—பருமை- அம்சொல்—அழகிய சொல் ..இனியசொல் அழகுடைத்தன்று—அழகுடைத்து, அன்று — அழகுடையதோ, அழகில்லாததோ. இஞ்சி—மதிள். காணிய—காண.

'அழகுடைத்தன்று' என்பதற்கு 'அழகில்லாதது' என்று பொருள்கூறல் இங்கே பொருந்தாது; 'அழகுடைத்து, அழகுடைத் தன்று' எனப்பிரித்துப் பொருள்கொள்ளலே பொருந்தும். இந்த 'அழகுடைத்தன்று' போல அகலிகைப்படலம் எசுஈ-ம் பாட்டில் 'தக்க தன்றென்ன ஓராள்' என வருவதற்குத் 'தக்கதென்ன, அன்றென்ன ஓராள் என்று பிரித்துப் பொருள் கொள்க' என்று ஸ்ரீ-ரா. ராகவையங் கார் அகலிகை வெண்பா இரண்டாம்பதிப்புக்கு எழுதியிருக்கிற முகவுரை XIX-ம் பக்கத்திற் கூறியிருப்பதை நோக்குக.

25. பாடகக் கால் அடி பதுமத்(து) ஒப்பன;
சேடரைத் தழீஇயன; செய்ய வாயன;
நாடகத் தொழிலன; நடுவு துய்யன;
ஆடகத் தோற்றத்த; அளவு இ லாதன.

இ. ள். (அயோத்திமாநகரத்து மாளிகைகள்,) பாடகக் காலடி பதுமத்தொப்பன—1. பெரியவைகளாய் உள்ளிடத்தேயுள்ள தூண்

களின் அடி (ப்பாகமாகிய பீடங்கள்) தாமரைப்பூ (வைக் கவிழ்த்தாற்) போன்றன; [பாடு—பெருமை. அகம்—உள்ளிடம். கால்—தூண்] 2. (அந்த மாளிகைகள், தம்மை மாதரென்று சொல்லும்படி,) பாடகம் (அணிந்த) கால்களின் அடிகள் (ஆகிய பாதங்கள்) செந்தாமரை (மலரைப்) போல்வன: சேடரைத் தழீஇயன—1. (அம் மாளிகைகள் அத்திவாரத்தின் ஆழத்தினால்) ஆதிசேடனைப் பொருந்தியன; [சேடரை என்றது உயர்வுப் பன்மையாய் ஆதிசேடனை உணர்த்தியது] 2. (அம்மாளிகைகள் தம்மைமாதரென்று சொல்லும்படி,) இளைஞரைத் தழுவியுள்ளன: [சேடு-இளமை]. செய்பவாயன...1. (அம்மாளிகைகள்) சிறந்த (வேலைப்பாடமைந்த) வாயில்களை உடையன; [வாய்-வாயில்—வாசல்] 2. (அம் மாளிகைகள், தம்மை மாதரென்று சொல்லும்படி) சிவந்தவாயை உடையன: நாடகத் தொழிலன—1. (அம் மாளிகைகள்) நாடு அகத்தொழிலன—அகத்து நாடு தொழிலன—உட்புறத்தே (ஆச்சரியப்பட்டு ஆராயத் தக்க (சிற்பம் சித்திரமுதலிய) தொழில் (அமைந்த அழகிய பணிகள்) உள்ளன; 2. (அம் மாளிகைகள், அவைகளை மாதரென்று சொல்லும்படி,) கூத்தாகிய தொழிலையுடையன: நடுவு தூய்யன—1. (அம் மாளிகைகள்) நடுப்பாகம் சுத்தமாக (ஆகாயவெளி) உள்ளன; 2. (அம் மாளிகைகள் தம்மை மாதரென்று சொல்லும்படி) இடை தூ(ய்) அ(ன்)ன—இடை, தூற்கும் பஞ்சிற்றொடர் நுனியை ஒத்தன: ஆடகத் தோற்றத்த—1. (அம் மாளிகைகள் பொன் (மேருப்) போலும் காட்சியுடையன; 2. (அம் மாளிகைகள் மாதரென்று சொல்லும்படி) பொன் போலும் பொலிவுடையன: அளவில்லாதன (அந் நகரத்து மாளிகைகள் அந் நகரத்து மாதர்போல) எண்ணிறந்தவைகள்.

முந்தியபாட்டுக்களில் உள்ளமாளிகைகள் இப்பாட்டுக்கு எழுவாய், அந்தமுந்தியபாட்டுக்கள் இந்த இன்கவித்திரட்டில் விட்டுவிடப்பட்டிருக்கின்றன. இப்பாட்டு மாளிகைகளின் வருணனையாய், முழுதும் மாளிகைகளுக்குப் பொருத்தமாகவும் வினைமுடிவுகள் நீங்கலாக மாதருக்குப் பொருத்தமாகவும் தொனிச்சிலேடையாக இயற்றப்பட்டிருக்கிறது. எல்லாவினைகளும், பலவின் பால்வினைகளாய், மாளிகைகளுக்கே பொருந்துவனவாயும், பால்வழுவமைதியாகக் கொண்டாலொழிய மாதருக்குப் பொருந்தாதனவாயும் உள்ளன, ஆதலால் ' வினைமுடிவுகள் நீங்கலாக' என்று கூறப்பட்டது. (தொடரும்)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

மேற்றிசைச்செல்வம்.

(The Wealth of the West.)

(செந்தமிழ்த்தொகுதி-உ0, பகுதி-கஉ, சஎடு-ம் பக்கத்தொடர்ச்சி).

நாகரீக வரலாறு.

எகிப்திய நாகரீகம்.

11. கோளதேயத்திலிருந்து கப்பலேறிச் சூரியாஸ்தமனதிசையைநோக்கி நோாகப்போவோமாயின் பலநூறுகாவதங்கள்கழிய மேற்றிசைக்கடலின் எல்லைவந்தெய்தும். இவ்வெல்லையிலுள்ளது ஆபிரிக்காக் கண்டமெனப் பெயரிய பெருநிலப்பரப்பு. இதன்வடபாரிசத்தில் முன்னாளிற் சாகரமாயிருந்து இந்நாளிற் பாலைவனமாயிருக்கிற சகாராவனந்தரம் பரந்துகிடக்கின்றது. சகாராவுக்குக்கிழக்கே அதாவது ஆபிரிக்காக்கண்டத்தின் வடகிழக்குக்கோடியிலே நீலநதிபாய்தலினாற் பலவகைவளங்களும்பொருந்திய எகிப்துநாடு உளது. இந்நாட்டிற்குச் செல்வமளிக்கும் நீலநதி தெற்கேயுதித்து வடக்குநோக்கியோடி நாட்டின் நீளமுழுவதையும் கடந்து ஆபிரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் நடுவணதாகப் பொருந்தியிருக்கும் மத்தியதரைக்கடலினுட் பாய்கின்றது. ஆசியாவின் தென்மேற்குக் கோடியிலுள்ள அராபிநாட்டினையும் எகிப்துநாட்டினையும் பிரித்துநிற்பன செங்கடலும் சுவெஸ்கால்வாயுமாம். நமது நாட்டிலிருந்து மேனாட்டுக்குச்செல்வோர் செங்கடல் சுவெஸ்கால்வாய் மத்தியதரைக்கடல் இவற்றைக்கடந்து அத்லாந்திக் சமுத்திரவாயிலாகச் செல்வார். முன்னாளிற்போலவே இந்நாளிலும் எகிப்துநாடு மேற்றிசைச்செல்வமும் கீழ்த்திசைச்செல்வமும் ஒன்றுசேர்தற்குரிய நாடாகவிருக்கின்றது.* இந்நாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் பூர்வசம்பந்தமுளதாதலால் இதனது நாகரிக வியல்பைச் சற்றுவிரிவாக ஆராய்வாம்.

12. எகிப்தியர் நீலநதிக்கரையையடைவதற்குமுன் கிழக்கிலிருந்து கடல்கடந்துவந்ததாக அவர்களது பூர்வசரித்திரஞ்சொல்லுகிறது. தமது பூர்வதேயத்தை எகிப்தியர் "பண்டு" என்னும் பெயரால் வழங்கினர். பண்டுதாம் இருந்துவந்தநாட்டினைப் "பண்டு" என

வழங்கினாரோவென்பது ஆராயற்பாலது. பூர்வஎகிப்தியர் ஏழாயிரத்துச் சில்வானம் வருஷங்களுக்குமுன்னர் இருந்தார்களெனினும் அவருடைய அரசர் பலரது உடலங்கள் மருந்திட்டுச்சேமிக்கப்பட்டிருக்கின்றனவாதலால் அவற்றையின்றும் பார்க்கலாகும். திராவிடரும் பூர்வஎகிப்தியரும் ஒரேகுலமுறையில் வந்தவரென்பது ஹக்ஸ்லி முதலிய சாஸ்திரவிற்பன்னர்களுடைய கருத்து. சென்றஆண்டிற் கிரேததீவிற்கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டிலுள்ள மொழி திராவிடமொழிகளோடு சம்பந்தமுடையதென மேனாட்டு அறிஞர் கூறுகின்றனர். பூர்வஎகிப்தியர் ஆதியிற் சித்திரங்களால் மொழிகளைக் குறியீடுசெய்தனர். பின்னுளில் வரிவடிவெழுத்தைக் கிரேததீவத்தாரிடமிருந்து பயின்றுகொண்டனர் என்று எண்ண இடமுண்டு. கிரேததீவத்தாருடைய நாகரிகத்தைப்பற்றியும் உலகில் வரிவடிவெழுத்து உண்டாயினகாலத்தைப்பற்றியும் பின்னராராய்வாம். எகிப்து நாட்டினது நாகரிகத்தையாராயும்போது முதலிலே காணப்படுகிற சிறப்பியல்பு எதுவோவென்னில் தொன்றுதொட்டு இந்நாடு உணவுப்பொருள் முதலியவற்றுற் குறைவுபாடில்லாததாய்ச் செல்வவளம்பொருந்தியதாய் இருந்தமையினுல் இந்நாட்டார் பிறநாட்டுக்குச் சென்றாரல்லர். பிறநாட்டார் இந்நாட்டுச் செல்வத்தைக் கவரவிரும்பிப் பலமுறை படையெடுத்துவந்து இந்நாட்டினைப் பற்றி அரசுபுரிந்தனர் என்பது. தற்காலத்திற் சுவெஸ்கால்வாயைப் பரிபாலிப்பதற்காக ஐரோப்பியராஜாங்கங்கள் எகிப்தின் அரசியலோடு தொடர்புடையனவாயிருக்கின்றன.

3. சென்ற ஒருமாதகாலமாக வர்த்தமானப்பத்திரிகைகள் எகிப்துநாட்டினைப்பற்றி யிருவேறுவகையான விசேஷசமாசாரங்களைத் தந்துவருகின்றன. அவற்றுள் ஒன்று, எகிப்துநாட்டின் தற்கால அரசியல்நிலையைப்பற்றியது. காருண்ணிய ஆங்கில அரசாங்கத்தார் எகிப்துநாட்டுக்குப் பூரணசுதந்தரம் கொடுத்துவிட்டார்களென்றும், அங்ஙனமாயினும் அலன்பி பிரபுவும் ஆங்கிலசைநியங்களும் இன்னும் எகிப்திலிருந்து புறப்படவில்லையென்றும், எகிப்திய தேசாபிமானியாகிய சாக்லுல் பாஷா இன்னுஞ் சிறைச்சாலையிற்றான் இருந்துவருகிறாரென்றுங் கூறுவது, மற்றென்று எகிப்து நாட்டிலுள்ள லுக்சோர் நகரத்துக்குச் சமீபத்தில் துத்தங்காமன் என்னும் பூர்வீக அரசனொருவனுடைய சமாதிக்கட்டிடங் கண்டுபிடிக்கப்பட்டதென்றும், அதனுட்

பொன்னாலும் மணியாலும் அலங்கரிக்கப்பட்ட அழகுபொருந்திய கருங்காலிக்கட்டில்களும், நவமணியிழைத்த ஆபரணங்களும் விலையுயர்ந்த பிறபொருள்கள் பலவும் அகப்பட்டனவென்றும், அவற்றினைக் கண்டுபிடித்த கார்னார்பன் பிரபு அறிவுவிர்த்திபைக்கருதினவரே யன்றிப் பொன்னையும் மணியையும் பொருட்படுத்துபவரல்ல ராதலால் ஏற்கனவே எகிப்திய அரசாங்கத்தாரோடு செய்துகொண்ட உடம்படிக்கையிற் றமக்குப் பங்குவேண்டாமென்று சொல்லிவிட்டாரென்றும், அங்ஙனமாயினும் வழக்கப்படி அவருக்கு அரைப்பங்குகொடுப்பது மரபாமெனவுங்கூறுவது. துத்தங்காமனுடைய சமாதிக்கட்டிடத்தைப்பார்வையிடுவதற்காக இங்கிலந்து, பிராஞ்சு, அமெரிக்கா முதலிய தேசங்களிலிருந்து நூற்றுக்கணக்கான கலைநூல்வல்லோருஞ் செல்வப்பிரபுக்களும் வந்துசேருகிறார்கள். மேற்றிசையறிஞருக்கு எகிப்துதேயத்தின்மீது இத்தனை யார்வமுண்டாவதற்குக் காரணமென்னவென்னில், தற்கால ஐரோப்பிய நாகரிகத்துக்குத்தாயகமாகிய யவனபுர ரோமபுர நாகரிகங்கள் உண்டாவதற்கு முற்பட்டதாய் அவையனைத்துக்கும் நிலைக்களமாய் இருந்ததுவும், ஆசுரேய, பாரசீக, எபிரேய, பினீசிய, கிரேத (cretan) நாகரிகங்களோடு தொடர்புடையதுவும் எகிப்திய நாகரிகமாதலானும், பிரேதசேமக் கட்டிடங்களிற் காணப்பட்ட கல்வெட்டுகளைக்கொண்டு எகிப்தின்சரித்திரத்தைத் தொடர்ச்சியாகவே அறிந்துகொள்ளுதல் கூடுமாதலானும் மேற்றிசையறிஞர்கள் எகிப்திய புராதன ஆராய்ச்சி (Egyptology)என ஒருகலைநூற்பிரிவு ஏற்படுத்திப் பெருக ஆராய்ந்து வருகிறார்கள்.

14. அஃதன்றியும் பின்னாளில் ஒருவர்பின்னொருவராய்ப்பலவேறு சாதியார் எகிப்துநாட்டினைக்கைப்பற்றி, அதிகாரஞ்செலுத்தினராதலால் அச்சாதியார் பலருடைய சரித்திரத்தையாராய்வதற்கு எகிப்திய சரித்திரவாராய்ச்சி யின்றியமையாததொன்றாம். பூர்வ எகிப்தின் நாகரிக உயர்ச்சிக்கு அறிகுறியாக இன்றும் நின்றுநிலவுகின்ற (Pyramids "பிறமிட்ஸ்" எனப்படும்) பிரேதசேமக் கட்டிடங்களின் அமைப்பை நோக்கும்போது இற்றைக்கு ஆறாயிரத்துச்சில்வானம் ஆண்டுகளுக்கு முன் அவற்றைக்கட்டிமுடித்த பூர்வ எகிப்தியர் அக்காலத்துக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன்பு உயர்ந்த நாகரிகம்படைத்தவர்களாக விருந்திருக்கவேண்டும் என்பது புலப்படுகின்றது. உலகில் நாகரிகம்

ஏற்பட்டகாலத்துக்கு முற்றெல்லைகூறுவது ஒருவாற்றானும் இயலாத தொன்றும். தற்கால ஐரோப்பியர் நாகரிகம் அடைந்தகாலம் மிகஅணித் தானதாதலின் சில்லாயிரம் ஆண்டுகளுட்பட்ட தமது முன்னேற்றத்தை யளவுகோலாகக்கொண்டு ஏனையோரும் தம்முன்னோரைப்போலவே யிருந் திருக்கவேண்டும் என்ற சித்தாந்தத்தை யேற்படுத்தி உலகு நாடோறும் மேனிலையை யடைந்துகொண்டுபோகின்றதென்பர். இனி, நாமோவென் றாற் பல்லாயிரமாண்டுகளுக்குமுன்பு நமது முன்னோர் சீருற்றிருந்தா ரென நமது நூல்கள் கூறுகின்றவாதலின் உலகு காலாந்தரத்திற் கீழ் நிலையை யடைந்துகொண்டுபோகின்றதென்போம். இருசாராருடைய கொள்கையும் ஒருவகையில் உண்மையேயாயினும் இவ்வுலகு உயர்வது மின்றித் தாழ்வதுமின்றி மிக மிகப் பூர்வகாலந்தொட்டு ஓரேபடித்தாக விருக்கிறதென்பது பொருத்தமான முடிபெனல் பிழையாகாது. வட சோடியுயாத் தென்சோடிதாழ்வதும், குடபாலிற் செல்வம்மிகுக்கக் குண பால் வறுமையுறுவது, குணபால் உயர்ச்சியடையக் குடபால்தாழ்வதும் இயல்பேயாகும். இந்நாளிற் பலதேயங்களுக்கிடையிற் கொடுக்கல் வாங் கல் ஏற்பட்டிருப்பதுபோல அந்நாளிலும் கலத்தில் செல்வதும் பண்ட மாற்றுவதும் இருந்ததென்பதற்கையமில்லை. இந்நாளிலுள்ள இயந்திரக் கப்பல்கள் விரைவிற்செல்வன அந்நாளிலுள்ள மரக்கலங்கள் காற்றோட் டத்துக்கேற்றவாறு விரைந்தோ பதமையாகவோ செல்வன இதுவேவேறு பாடு.

15. எகிப்துநாட்டின் நாகரிகம் கலியுக ஆரம்பத்துக்கும் முந்திய தென அறிகிறோம். ஆயினும் விரிவஞ்சி இவ்வாராய்ச்சியிற் கலியுக ஆரம்பந்தொட்டு மேல்நடந்தகாலத்திற்சம்பவித்த ஒருசில விசேஷக் குறிப்புகளைமட்டுஞ் சொல்லிமுடிப்பாம். கலியப்தம் 5024-ம் ஆண்டு நடக்கிறது. ஆதலிற் கலியுகஆரம்பம் கி. மு. 3101-ம் ஆண்டு ஆதல் வேண்டும். பெப்பி (Pepy I) என்னும் எகிப்தியஅரசனுடைய காலம் கி. மு. 3447-ம் ஆண்டு எனநிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அதாவது கலியுக ஆரம்பத்துக்கு 346 வருஷங்களுக்குமுன்னே பெப்பி என்னும் அரசன் எகிப்தில் அரசுபுரிந்தான் என்பதாம். இவன் ஆறாவது இராஜ வமிசத்தவன். இவனுடையகாலத்துக்குமுன்பு ஐந்து இராஜவம்சங்கள் அரசாட்சிபுரிந்தன, அவற்றின் காலவெல்லை எத்தனை நூற்றாண்டுகளோ அறியோம். இக்காலத்தில் மெம்பிஸ் (memphis) என்னும் நகரம்

எகிப்தின் ராஜதானியாயிருந்தது. இக்காலம் புராதன பாரம்பரியகால மென்னலாம். இக்காலத்திற்றான் "பிறமிட்ஸ்" என்னும் பிரேதசேமக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. யுகாரம்பத்துக்குமுன்பு கட்டப்பட்ட இக்கட்டடங்கள் இன்றும் அழியாதிருக்கின்றன. இவற்றைக்கட்டின வர்களுடைய சிற்பநூல் வன்மைக்கும் லக்ஷக்கணக்கான சனங்களுக்கு உணவு முதலியனகொடுத்து இப்பாரியகட்டிடங்களைக்கட்டுவித்த அரசர் களுடைய செல்வப்பெருக்கத்துக்கும் இக்கட்டிடங்களே சாட்சியாக நிற்கின்றன. இக்காலத்திற்போல அக்காலத்தில் வரிப்பணம்வாங்கு கிறவழக்கம் இருந்ததில்லை. அறுப்புக்காலம் முடிந்தபின் சனங்கள் மூன்றுமாசத்துக்கு அரசனுடைய பணிசெய்யவேண்டும். அவ்வாறு பணிசெய்கின்ற நாட்களில் அவர்களுக்குவேண்டிய உணவுமுதலியன அரசகளஞ்சியத்திலிருந்து கொடுக்கப்படும். அரசருடைய சொந்தவயல் நிலங்களிலிருந்து விளைந்துவருகிறநெல் பிரஜைகளனைவரும் உண்டு மிஞ்சத்தக்க அளவினதாயிருக்கும். "பிறமித்ஸ்" கட்டப்பட்டிருக்கிற நகரத்துக்குப்பெயர் "கிசே" என்பது. கலியுக ஆரம்பத்துக்கு 234 வருஷங்களுக்குமுன் "தீப்ஸ்" என்னும் நகரம் ராஜதானியாயிற்று. இதுமுதல் கலி 1500-ம் ஆண்டுவரையுமுள்ள காலத்தை மத்தியபாரம் பரியகாலம் என்னலாம். இக்காலத்திற் கட்டப்பட்ட சிறந்த கட்டிட மாகிய "குளத்தலை முற்றக்கோயில்" (Lopero hounit, temple at the head of the lake) மொயெறிஸ் என்னும் குளத்தின் வாயிலில் அமைக்கப்பட்டுப் பேரழகுவாய்ந்திருந்தது. இதனைப்பற்றி ஹெறொ டொற்றஸ் என்னும் யவனபுர அறிஞர் தாம் எழுதிய இதிகாசநூலிற் சொல்லியிருப்பதை மொழிபெயர்த்துத்தருவாம். "இக்கோயிலின் அழகு சொல்லால்வருணிக்குந்தரத்ததன்று; யவனபுரத்திலுள்ள கட் டிடங்கள் அனைத்தும் ஒருங்குசேரினும் இதனோடு இணை சொல்லவாரா. யவனபுரத்தில் எபேசஸ் பட்டினத்திலுள்ள கோயில் சிறப்பு வாய்ந்தது, சமோஸ் நகரிலுள்ளதும் அத்தகையதேயாயினும் யவனரது செய்தொ ழில் வன்மைபனைத்துந்திரண்டாலும் செய்துமுடிக்க வொண்ணாத இத்திருமனை எகிப்தியரியற்றிய பிறமிட்ஸினையும் வெல்லுந்தகைமை யது." இவ்வாறு புகழப்பட்ட இக்கட்டிடம் முற்றாக அழிந்து போயிற்று ஆயினும் இது அரசர் வசிப்பதற்காக அமைக்கப்பட்ட ஒரு பெருமாளிகை யென்பது அறியக்கிடக்கின்றது. கலி 343-ல் அரசு

புரிந்த எகிப்திய அரசன் பெயர் உசேர்தசன் என்பது. இவனுடைய காலத்தில் சனங்கள் எவ்வாறு வாழ்ந்தார்களென்று அறிவதற்கு அக் காலத்திலிருந்த அமெனியென்னும் அரசமனையுத்தியோகஸ்தன் ஒருவனைப்பற்றி யெழுதினதை மொழிபெயர்த்துத்தருவாம். "அரசருடைய தொழிற்சாலைகளை நேர்மையொடும் மேற்பார்த்து வந்த அமேனி எல்லாநற்குணங்களும் நிறையப்பெற்றவனாயிருந்தான். வறியோருடைய சிறுவரையும் கணவனையிழந்த உயவற்பெண்டிரையும் இவன் ஒருபோதும் வருத்தியதில்லை. தனது மேற்பார்வையின் கீழிருந்த நாடனைத்தினையும் செல்வினையும் நாடாக்கினனாதலால்" பஞ்சகாலத்திலும் சனங்கள் பசியால் வருந்தினாரல்லர். முன்னாளிலிருந்த மன்னர்கள் உணவுப்பொருள்களை விருத்திபண்ணுவதிற் கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள். மத்தியபாரம்பரியகாலத்துக்குப் பிந்திய காலத்தை நவபாரம்பரியகாலம் (New Empire) என்னலாம். இக் காலத்திற்றான் எகிப்துநாட்டிற் குடியேறியிருந்த எபிரேயர் அந்நாட்டினைவிட்டு மோசேஸ் என்னுந் தலைவரால் வழிநடத்தப்பட்டுப் பாலைவனங் கடந்து பலஸ்தீனத்தையடைந்தது. எபிரேயர் யாத்திரைக் காலம் கலி 1900-ம் ஆண்டாகவிருக்கவேண்டும். இக்காலத்திருந்த பார்வோன் (பாரோன், Pharoah, மன்னன்) பெயர் இரண்டாம் இராமேசு. இதனோடு சம்பந்தப்பட்டகதைகளும் பாபிலோனிய ராச்சியம் அழிவுற்ற கதைமுதலியவும் விவிலியநூலின் பூர்வபாகத்திற் காணப்படுவன. இதற்குச்சற்று முந்தியகாலத்தில் "Hyksos" என்னும் பொதுவ மன்னர் (shepherd kings) எகிப்தினைக்கைப்பற்றி அரசியல்நடத்தி வந்தார்கள். ஆசுரேயமன்னனாகிய சினக்கிரிபு எகிப்துக்குப்படையெடுத்துவந்த காலம் கலி 2383-ம் ஆண்டு ஆகும். கலி 2485-ல் நெக்கோஎன்னும் பார்வோன் அரசுபுரிந்தான். அவனுடைய காலத்தில் எகிப்தியமரக்கலங்கள் ஆபிரிக்காக்கண்டத்தைச்சுற்றியோடினதாக அறிகிறோம். இக்காலத்தின்பின் அரசனுடைய கொடுங்கோலினாலும் சமயக் கணக்கர்களாகிய குருவகுப்பினருடைய கொடுமையினாலும் சனங்கள் வறுமையுற்று வலியிழந்தனராக வேறுசாதியார் ஒருவர்பின் ஒருவராய் எகிப்துநாட்டைக் கைப்பற்றினர். சைறஸ் என்னும் பாரசிக அரசன் கலி 2549-ல் (அதாவது புத்ததேவர் உலகில் வசித்தகாலத்தில்) எகிப்து நாட்டைக் கைப்பற்றினன்; அவனை மேற்கொண்ட அலெக்சாந்தர்

சக்கிரவர்த்தியென்னும் யவனபுரமன்னர் கலி 2769-ல் எகிப்து நாட்டிற் றம்முடைய அதிகாரத்தை நிலைநிறுத்தினர் இவருடைய இராஜதானி இன்றும் அலெக்சாந்திரியா என்னும் பெயரோடு நின்று நிலவுகின்றது. அலெக்சாந்தருடைய காலத்துக்குப்பின் அவருடைய சக்கராதிபத்தியம் அல்லோலகல்லோலப்பட்டுவிட்டது. எகிப்துநாடு இருநூறு ஆண்டுகளுக்கு சுய அரசுடைய தாகித்தொலமி (Ptolemy) என்னும் வம்மிசத்தாராற் பராபரிக்கப்பட்டுவந்தது. அந்தொனி என்னும் ரோமானிய மன்னருடைய உள்ளத்தைக்கவர்ந்த பேரழகுவாய்ந்த கிளியோப்பத்திரா என்னும்ராணி தொலமிவம்மிசத்தைச்சேர்ந்தவள். இவளுடைய காலத்தோடு எகிப்திய நாகரிகம் அழிந்துபோயிற்று. தொலமிவம்மிசகாலத்தில் கல்விமிகவும் சிறப்புறப்பரிபாலிக்கப்பட்டுவந்தது வானநூல் முதலியன பெருக ஆராயப்பட்டுவந்தன. கலி 2971-ல் ரோமபுரச்சக்கரவர்த்தியாகிய ஆகஸ்டஸ் மன்னர் எகிப்தினைக் கைப்பற்றினர் அதன்பின் சில நூற்றாண்டுகள் கழிய எகிப்தில் கிறிஸ்தவ சபையொன்று ஏற்பட்டது. மதோன்மத்தம்பிடித்த ஆதிக்கிறிஸ்தவர் கல்விச்சாலைகளை யழித்ததுவும் ஹைப்பேசியா என்னும் கலைச்செல்விக்குச் செய்த அவமானங்களும் எழுதுந்தாத்தவல்ல. இதன்பின் அராபியர் எகிப்துநாட்டைக் கைப்பற்றி நெறிதவறாது அரசியல் புரிந்து வருவாராயினர்.

16. மேற்காட்டிய சுருக்கவரலாற்றினால் எகிப்து நாட்டுக்கும் பிறநாடுகளுக்கும் உள்ளதொடர்பினை விளக்கினும். எகிப்து நாட்டுக்கும் தமிழ்நாட்டுக்குமுள்ள தொடர்பினைச் சுருக்கமாகவிளக்கும் பொருட்டுப் பலகலையும் கற்றுவல்ல அறிஞரும் தவப்பெருஞ்செல்வருமாகிய ஸ்ரீமத் விவேகாநந்தசுவாமிகள் "பரிவிராஜகம்" என்னும் நூலில் எழுதியிருக்கிற சில குறிப்புகளை மொழிபெயர்த்துத் தருவாம் பரிவ்ராஜகமென்னும் நூல் சுவாமிகள் இரண்டாம் முறை மேற்றிசை செல்லும்போது தமது யாத்திரையைப்பற்றி யெழுதிய விருத்தாந்தமாகும்,

" கப்பல் வடக்குநோக்கிச் செங்கடலினூடாகச்செல்லுகிறது. இக்கரையிற் பரந்து கிடப்பது பூர்விக எகிப்து தேயம். பல்லாயிரவருஷங்களுக்குமுன்பு பண்டு (மலையாளதேயம் என்று எண்ண இடமுண்டு) என்னும் நாட்டிலிருந்து வந்த எகிப்தியர் இந்நாட்டிற் சிறந்த நாகரிகத்தை விருத்திபண்ணினூர்கள். யவனபுரத்தார் இவர்களுக்கு மாணுக்கராவார். பூர்வ எகிப்தியருடைய கட்டிடங்கள் இன்னும் நிலைத்திருக்கின்றன. இவர்கள் சுருள்குழலும் காதணியுமுடையவர்களாய் சுத்த வெண்ணிறவேட்டியணிடவர்களாயிருந்தார்கள் ".

தொலடியர் காலத்தில் அசோகச்சக்கிரவர்த்தி எகிப்துக்குப் புத்த சந்நியாசிகளையனுப்பிவைத்தார் ".

" கருநிறமும் நீண்டமயிரும் நேரியமூக்கும் சரிவில்லாதகரியவிழியும்உடைய ஒருசாதியார் பூர்வஎகிப்திலும் பாபிலோனியத்திலும் வசித்தார்கள் அச்சாதியார் இந்நாளில் இந்தியாமுழுமையிலும் விசேஷமாகத் தெற்குப்பாகத்திலும் வசித்துவருகிறுர்கள். ஐரோப்பாவின் சிலபாகங்களிலும் இவர்களைக்காண்டல் கூடும். இவர்களே திராவிடரெனப்படுவர்.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
மயிலாப்பூர், சென்னை.

பிரபோதசைதந்யர்.

புதியகல்விமுறை.

[கசஉ-ம் பக்கத்தொடர்ச்சி].

மாண்டிஸோரிமுறை.

II

தற்காலக் கல்விவிமர்சனம்.

நன்னடக்கையையும் அறிவுறுத்தலையும் மேற்கொண்ட கோள்கைகள்:—இன்னவென ஆராய்வாம். மக்கள் இளம்பிள்ளைகளை விளையாட்டுப்பொருள்களோடு சேர்த்தபோதிலும் நன்னடக்கையில் தம்மைப்போல விருக்கவேண்டுமென விரும்புகின்றனர். குழந்தைகளின் அறிவை வளர்க்கத்தெரியாது தாம் செய்வதுபோல அவையும் செய்யவேண்டுமாம். பிள்ளைகள் பெரியோர் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் முரண்டும்போது நல்லபிள்ளைகளல்லவென்றும் இன்னும் பலவிதமாகவும் பேசுகின்றனர். அவர்கள் நீங்கள்தானே இவ்விதமாக எங்களுடைய மனநிலையைக் கெடுத்ததென்று சொன்னால் பெரியோர்களிற் சிலருக்கு அது அதிசயமாகத் தோற்றலாம்; மற்றுஞ்சிலருக்கு மரியாதையின்மையாகவும் படலாம். குழந்தைகளுக்குக் கல்விபுகட்டி, அதனில் விருப்பமுண்டாக்கி, நற்கதைகளைச்சொல்லித் தன்வயப்படுத்திக்கொண்டு பெரியோர் விருப்பப்படி அவர்களை நடக்கும்படிசெய்தால் நன்மக்களாக்கிவிடலாம். இம் முதல்வரிக்குப் பிறகு, மூத்தோர் இளைஞர்கள் செய்யவேண்டியவை யாவென வாராய்ந்து முட்டுப்பாடின்றிச் செய்யக்கூடியவைகளைச் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். சிலசமயங்களில் தாங்களே செய்வதற்கஞ்சும் பெரும்வேலைகளைச் சிறுவர்க்குக்காட்டுவது பிழையாகும். நாளொன்றுக்கு நாலைந்துமணிநேரம் ஓரேவிதமான சொற்பொழிவை (Lecture)க் கேட்கவிடுவது இதற்கு உதாரணமாகும்.

குழந்தைகளின் மனதைப் பண்படுத்துபவர் ஆசிரியரே:—மேலே கூறிய முறைதான் கலாசாலைக்கும் ஆசிரியர்க்கும் மாணுக்கர்களின் முழுக் கவனத்தையும் தன்வயப்படுத்துதல், பாடங்கேட்டதை அமைவர அவர்

கள் மனதில் நிறுத்தும்படி செய்தல் இவைகளில்வல்லவரே நல்லாசிரியர். அவர் முதலில் உளநூலில் (Psychology) தேர்ச்சியுடையவராகவிருக்கவேண்டும்; அல்லது அதன் குணுதிசயங்கள் யாவென அறிந்து கொள்ளவேண்டும். இதற்கு நன்னடக்கைக்குற்ற கல்வி அவசியம். இதற்கு வகுப்பில் ஒழுங்கு ஏற்படவேண்டும். மாணவர்களும் ஆசிரியரது முயற்சியைப்பின்பற்றி நடக்கும்படி அன்பினுலாவது, அல்லது, வன்பினுலாவது செய்யவேண்டும். இது சரிவர நடக்காவிட்டால் வேறொன்றும் நடவாது. மாணவர்களின் சக்தியைத் தகுதிக்கேற்ப உபயோகப்படுத்தவேண்டும். குழந்தைகள் எவ்வளவுநேரம் படிக்கலாம்? எவ்வளவு ஓய்வுவேண்டும்? அடிக்கடி ஓய்வுவேண்டுமா? எப்பொழுது படிப்பது நன்மையடையக்கும்? எந்தப்பகுதியை முதலில் படித்தல் நலம்? என்பது முதலான வினுக்களை நன்கு கவனிக்கவேண்டும். பலகையில் எழுதுங்கால் குழந்தைகள் அவைகளைப் பார்ப்பதற்கு எவ்வளவு ஒளியிருத்தல் அவசியம்? எழுத்து எவ்வளவுபெரிதாய் இருக்கவேண்டும்? என்பவை கவனிக்கவேண்டும். குறைந்த ஒளியாலும் சிறு எழுத்துக்களாலும் கண்களுக்குக் கேடுண்டாகும். அதனுல் அநேகக் குறும்பார்வைக் கண்ணர்களாகிறுர்கள்.

கல்வியிலே முக்கியமாகத் தெளிவு (Clarity), சேர்க்கை (Association), ஒழுங்கு (System) வழி (Method) இந்நான்கும் இருக்கவேண்டுமென முதன்முதலில் வேதர்பாட்டென்பார் கண்டார். பின்னரே பலரும் அதைக்கையாட முயன்றனர். ஒருபொருளைக்காட்டி அதன் கூறுகளை விளக்கிக்காட்டுவது தெளிவு; பக்கத்திலுள்ளவைகளோடு ஒப்பிட்டுச் சீர்தூக்கி நிதானித்தல் சேர்க்கை; மேலே காட்டியவைகளிலிருந்து தான்கொண்ட தீர்மானம் ஏற்பாடு; இவைகளைப்பார்த்ததால் நமக்கு உண்டாகிய எண்ணமும் கோட்பாடுகளும் வழிஎனப்படும். இந்த வழிகளில் குழந்தைகளின்புத்தியை உபயோகப்படுத்திச் செம்மைசெய்ய ஆசிரியர் முயலவேண்டும். இனி, இளைஞர்களை ஒருவழிப்படுத்தி அவர்கள் நாழிநாழியாக, நாட்களாக, வருடங்களாக ஆசிரியர் சொல்வதைக் கேட்பதென்றுல் சாமாணியமான காரியமல்ல. ஒருவரிருவரைச் சொல்வதைக் கேட்கச்செய்வதே இயலாதகாரியமாயிருக்கையில், அநேகபிள்ளைகளின் கவனத்தைத்திருப்பித் தன்வயப்படுத்திநிறுத்தல் சாமாணிய

காரியமன்று. அதுவே ஆசிரியன் தொழிலாயிருக்கிறது. கற்பித்தல் என்னுந் தொழில் மாணவர்களது கருத்தை எவ்வளவுதூரம் பதியும்படி செய்யலாமென்பதிலிருக்கிறது. அதி சாமர்த்தியமுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களது கருத்தை ஒருபொருளில் உபயோகிக்கச்செய்து அதனால் களைப்பும் சலிப்பும் அடையாமல் பார்ப்பதாகும்" என்று ஆர்டிகோ (Ardigo, சொல்லுகிறார். இதேமாதிரியாக தன் மாணவர்களின் சக்தியைக் களைக்கச்செய்யாத ஆசிரியரே அதிசமர்த்தராவர்.

மாணவர்களின் நோய்களும் மருந்துகளும்.—முதன்முதலில் மாணவர்கள் சிலநோய்க்கு ஆளாகின்றனர் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அவைகளில் முக்கியமானவை முதுகெலும்பு(முள்ளந்தண்டு) வளைவான கூனலும் அண்மைப்பார்வையுமாம். கூனல் அதிகமாகப் பள்ளியில் மாணவர்களை உட்காரும்படி செய்வதால் ஏற்படுவது. பார்வைக்குறைவு, குறைவான ஒளியில் வசிப்பதாலும், கரும்பலகையில் எழுதி ஒளியில்லாதவிடத்தில்வைத்து வாசிக்கச்சொல்வதாலும், தூரத்தில்வைத்து வாசிக்கச்செய்வதாலும் ஏற்படுகிறது. பாண்டு, சோகை, குடல்நோய்கள் முதலானவை மாணவர்களுக்குற்ற நோயாயினும், அவைகள் அவ்வளவாக அதிகப்படுவதில்லை. இந்தக் கூனலையும் அண்மைவிழியையும் நீக்க மருத்துவநூல் ஒன்றும் கண்டுபிடித்ததில்லை. அதற்கு என்ன செய்யவேண்டுமென்றால் மாணவர்கள் உட்காரும் பலகை தகுதியானபடி அமையவேண்டும். இப்படிக்கணக்குப்பார்த்து 40, 50 மாணவர்களுக்கு அமைப்பது சாத்தியமல்ல ஆகையால் கூனர்களைஉண்டாக்குவது நின்றபாடில்லை. இதற்கு இதாலிதேசத்தில் ஒரு இயந்திரம் கண்டுபிடித்திருக்கிறார்களாம். அதனில் 6 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு மாணவனும் தலைகீழாகத் தொங்குவதாம். அதனால் முதுகுகூன் நிமிருகிறதாம்.

உளநூற்காட்சியினா லுண்டான தோற்றங்கள்.—சுகவழியால் அண்மைவிழியும் கூனலும் கண்டுபிடிக்கப்பட்டதுபோல உளநூற்காட்சியால் மாணவர்களது மூளைகளையும் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வுளநூற்காட்சி பேஷ்னர் (Fechner) என்பவரால் 1860 ல் கண்டுபிடிக்கப்பட்டது. ஆயினும் அது பொருத்தமாயில்லை. உண்ட் (Wundt) என்பார் செம்மை செய்தார். இவைகளும் பிழையாகக்காணப்பட்டன.

இன்னும்பலர் இப்பகுதியை ஆராயத்தொடங்கினர். அதிலிருந்து உள நூற்காட்சி (Experimental Psychology) தனிப்பகுதியாயிற்று. அதன்மூலமாக மாணவர்களின் சலிப்பு, ஓய்வு முதலானவை கண்டு கொள்ள ஏதுவாயிற்று. வயது, பால், அறிவின்தன்மை, மாணவனின் பிரிவு, காலவியல்பு, பழக்கவழக்கங்கள் ஓய்வு, மாணவனது முயற்சி, கிளர்ச்சி, தேகநிலை, திசையைநோக்க மாணவனிருப்பு இவைகளெல்லாம் கவனிக்கப்பட்டன. ஆயினும் இவைகளெல்லாம் வரவர அதிக இடையூறுகளை விளைவித்தன. விளைவிக்கின்றனவேயொழிய இன்னும் ஒருபகுதியும் விளக்கமுறவில்லை. பெண்ணைவிட ஆண் அதிக சீக்கிரத்தில் களைப்படைகின்றனரெனச் சிலரும், தன்னிஷ்டம் என்று பிடிவாதத்தாற் சிலர் களைப்படைகின்றனர் எனச் சிலரும் இன்னும் பலபல விதமாகப் பேசுகின்றனரேயொழிய ஒருவிதமான முடிவுக்கும் வந்தபாடில்லை. ஆயினும் என்முறையைக்கற்றுத் திரும்பிய ஒருசிற்பி இந்நூல் வல்லுநர் பலரும் இவைகளெல்லாம் இவ்விதமாயுண்டாகின்றனவென்று சொல்வதற்குப்பதிலாக அதன் தன்மைகளை விவரித்துக் கூறுகின்றனரென்றும் மரம் எப்படிவளருகிறது என்றுகூருமல் அதன் இலை, கிளை இவ்வாறு இருக்கின்றதென்று வியவகரிக்கின்றனரென்றும், அம் மர வளர்ச்சிக்கு அடியிலிருக்கும் ஒரே வேர்தான் காரணமாகலின் அதனை ஆராய்வதில்லையென்றும் அதுபோல நாம் போதிக்கும்முறை பிழையற்றது என்றும் கூறுவது கவனித்தற்குரியதாம்.

(தொடரும்)

சோமசுந்தரதேசிகர்.

இலக்கணவிளக்கபரம்பரை.